# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008

பதிவு இலக்கம் : 361910

காற்று : 09 சுகந்தம் : 35 (ஐப்பசி - மார்கழி) 2017

வாசகர்களுக்கு
இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!




100/=

சோமநாதர் இராசேந்திரம்
(தாமரைத் தீவான்)

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

மின் தடைப்பட்டாலும் குளிர்ச்சியை தரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள LG பவர்கட் குளிரூட்டி

LG
Life's Good

**7 மின் தடையேற்பட்டாலும் மணித்தியாலங்கள் தடையின்றி குளிர்ச்சியாய் வைத்திருக்கும்**

மின் தடையானாலும்

# எவர்கூல்




(நிபந்தனைகளுக்குட்பட்டது. முன்னறிவித்தல்களின்றி விலைகள் மாற்றப்படலாம்.
இங்கு காட்டப்பட்டுள்ள உருக்கள் நிஜத்திலும் வேறுபடலாம்.)

**தொடர்புகளுக்கு....**

**அபான்ஸ் காட்சியறை, 263, 265, திருமலை வீதி, மட்டக்களப்பு.**

**தொலைபேசி இல : 065-2227895**

**Abans**

ஆரம்பம் : 06. 04. 2008

# தென்றல்
# THENDRAL

44/I, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே : 077 - 6983597
பெக்ஸ் : 065 - 2227542
Email:- kirupabatticaloa@yahoo.com
இணையம் :- www.thendralbook.com

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி. கவிதா.கிருபாகரன்
கலாபூஷணம் ஆ. அரசரெத்தினம்
செல்வி. த.செல்வராணி

**ஓவியம்**
வே. ஹோகுலரமணன்

**கணனி வடிவமைப்பு**
யோ. மிருனாளினி

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர். (ஆ–ர்)

## பொலித்தீனுக்குத் தடை

உலகை மாசுபடுத்துவதில் பொலித்தீன் என்பது மிக முக்கிய பொருளாக இருந்து வருகின்றது. இது ஏற்படுத்தும் விளைவுகள் காரணமாக தடை செய்ய வேண்டுமென்ற சிபார்சுகளுக்கு அமைய இலங்கையில் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் இதன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இன்று பொலித்தீன், பிளாஸ்டிக், லஞ்சீற் என்பவற்றின் பாவனை நட்சத்திரக் கோட்டல்கள் தொடக்கம் சாதாரண சமையல் அறை வரை செல்வாக்கு செலுத்திக் கொண்டிருப்பது கண்கூடு.

இவற்றுக்குப் பதிலாக வாழையிலைகள், தாமரை இலைகள், தேக்கயிலைகள் என்ற இயற்கைச் செல்வங்களை மீண்டும் பாவிக்கும் நிலைக்கு மனிதன் தன்னைத் தயார்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இவற்றைப் பாவிப்பதால் இவை நீருடன் கலந்து, டெங்கு நுளம்புகள் பரவ நாமே வழிசமைத்துக் கொடுக்கிறோம். அத்தோடு இவற்றை எரிப்பதால் நச்சுப்புகை உருவாகி பல்வேறு தொற்றா நோய்களை ஏற்படுத்துகிறது.

எனவே நாமும் பொலித்தீனைத் தவிர்த்து நோய் - நொடியற்று ஆரோக்கியமாக வாழ்வோமாக!

என்றென்றும் அன்புடன்
–ஆசிரியர்–

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 450/= | US$20 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$100 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

உலகின் செம்மொழித் தகுதி பெறுவதற்கு தகைமைகள் பல வேண்டும். தொன்மையான தொடர்ச்சியான, உலகப் பொதுமையான, மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டதான, எளிமையான, இனிமையான இலக்கியங்களும் மொழியின் பழமை, செழுமை, தனித்துவம், கட்டுக்கோப்பு என்பவற்றை பேணுகின்ற இலக்கணங்களும் முதன்மை பெறுகின்றன. பேசும் போதும், வாசிக்கும் போதும், பாடும் போதும், நடிக்கும்போதும், எழுதும் போதும் அச்சு ஊடகங்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் செம்மொழியாக தகுதி பெற்ற எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை பேணி வளர்க்க முயல்வோமாக!

-கட்டுரை-

# புலவருக்கு தற்புகழ்ச்சி தகுமா?

-வீசுதென்றல் ஆறுமுகம் அரசரெத்தினம், களுதாவளை-



இக்கேள்வியை கேள்விக்கு உட்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது. புலவர் என்பவர் யார்? பல ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடிய திருவள்ளுவர், கம்பர், கச்சியப்பர், சேக்கிழார், வில்லிபுத்தூரர், இளங்கோவடிகள், திருத்தக்கதேவர், நக்கீரர் என்பவர்கள் புலவர்களாக கணிக்கப்படுகின்ற போது ஒரேயொரு பாடலைப் பாடிய சங்கச் சான்றோரும் புலவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். புலவர் என்பதற்கான தெளிவான வரைவிலக்கணம் என்ன என்பது வரையறுக்கப்படுதல் வேண்டும். இகழ்ச்சி என்பதன் எதிர்க் கருத்துள்ள சொல் புகழ்ச்சி. ஒருவருடைய அருமை பெருமை

திறமைகளை சரியாக புரிந்து கொள்ளாமல் எள்ளி நகையாடி நையாண்டி செய்யும் போது ஒருவர் தமது சுயவிபரத்தைச் சொல்லுவது தற்புகழ்ச்சி ஆகுமா?

தமிழர்களின் மிகத் தொன்மையான கலைப் படைப்பான நாட்டுக் கூத்திலே முக்கிய கதாபாத்திரங்கள் களரியில் முதன் முதலாக வருகை தருகின்ற போது கட்டியகாரன் என்ற கூத்தன் வந்து வரப்போகின்றவரின் விபரத்தைச் சொல்வதுண்டு. சபை விருத்தப் பாடலாகவும் வெளிப்படுத்து வதுண்டு. இவற்றுக்கு மேலாக அந்த நடிகரே தன்னைப் பற்றிய விபரங்களை சபையோருக்குச் சொல்லும் மரபினையும் நாம் அறியமுடிகின்றது. இன்றைய நவீன விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக உலகம் சுருங்கி விட்டது. பிரயாண வசதிகள், பத்திரிகை, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, இணையதளம், மின்னஞ்சல், சினிமா, முகநூல் என்பவற்றின் மூலம் ஒருவரைப் பற்றி விரைவாகவும், இலகுவாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. இவைகளெல்லாம் பயன்பாட்டுக்கு வராத பழைமையான காலத்தில் ஒருவரைப் பற்றி மற்றவர்கள் புரிந்துகொள்ளுகின்ற வாய்ப்புகள் மிகக் குறைவு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. **“வறுமையும் புலமையும் சேர்ந்தே இருப்பவை”** என்று கூறுவார்கள் புலமையாளர்கள். தமது உணவு, உடை, உறைவிடம் என்பனவாய தேவைகளுக்காக அரசர்கள், புரவலர்கள், கொடை வள்ளல்களின் தயவினை நாடி நின்றனர். புலவர்களை வரவேற்று உபசரித்து பரிசு வழங்கும் புரவலர்களிடம் புலவர்களை ஆற்றுப்படுத்திய ஆற்றுப்படை நூல்களை பத்துப்பட்டு என்ற தொகுப்பிலே காணமுடிகின்றது. கொடையாளியைப் பற்றி பெருமளவு அறிந்து கொண்ட புலவன் அவனைச் சந்தித்து அவனது உதவியைப் பெறுவதற்காக சபையை நாடி வருகின்றான். அரியணை மீது அரசன் அமர்ந்திருக்க அமைச்சர்களும், ஆன்றோரும், சான்றோரும், புலவர்களும் அமர்ந்திருக்கின்றார்கள். வருகின்ற புலவனுக்கு அங்கு குழுமி இருப்பவர்களைப் பற்றிய விபரம் தெரியாது. அங்கு கூடி இருப்பவர்களுக்கு புலவனைப் பற்றித் தெரியாது. அரசன் புலவனைப் பற்றி விசாரிக்கும் போது புலவன் தனது ஆற்றல்களையும், சாதனைகளையும் சபையோருக்கு தெரியப்படுத்துவது தற்புகழ்ச்சியாகுமா?

**“நிறைகுடம் தளம்பாது குறை குடம் தளம்பும்”** என்பார்கள். **“அடக்கம் அமரருள் உய்க்கும்”, “நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது”** என்றார் தெய்வப்புலவர். கலைவாணி அருள் பெற்ற காளமேகப் புலவரை அதிமதுர கவிராயர் சீண்டிப் பார்த்தார். **“இம் என்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம் பாட்டாகாதோ சும்மா இருந்தால் இருந்தேன் எழுந்தால் பெருங்காளமேகம் பிள்ளாய்”** என்று காளமேகப் புலவர் பாடியது தற்புகழ்ச்சி ஆகுமா? **“மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன் - என்னை விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வேந்தே குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு”** என்று கவிச்சக்கரவர்த்தி கேட்பது தற்புகழ்ச்சியா? தருமிக்கு பொற்கிழி அளித்த திருவிளையாடலிலே இறையனாருக்கும் நக்கீரனுக்கும் இடையே புலமைப் போட்டி சொற்போராக மாறியது. **“அங்கம் படபடென அரிவாளில் நெய் தடவி சங்கதனை கீர்கீரென அறுக்கும் கீரனோ நம்கவியை ஆராய்ந்து சொல்ல வல்லான்”** என்றார் இறையனார். **“சங்கறுப்பதெங்கள் குலம் சங்கரனார்க்கேது குலம் அரனே சங்கை அரிந்துண்டு வாழ்வோம் உம்போல் இரந்துண்டு வாழ்வதில்லை காண்”** என்றார் நக்கீரர். இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டினையும் வியாக்கியானம் செய்வதற்கு இரண்டு வருடங்கள் தேவை என்றான் புலவன். அலட்சியப்படுத்தும் நோக்கோடு காலத்தை சுருக்கமுடியாதா? என்று கேட்டான் அரசன். பல தடவைகள் காலம் சுருங்கியது. இறுதியில் அரசனின் கையில் இருந்த எலுமிச்சம் பழத்தை அரசன் மேலே எறிந்து மீளப் பிடிப்பதற்கு முன்னர் ஒரு கணப்பொழுதில் **“அராவணன் பட்டான்”** என்ற ஒரே வசனத்தில் இருகதைகளையும் சுருக்கிச் சொன்னான் புலவன். **“கூம்பும் பருவத்து கொக்கைப் போல் இருந்து சீர்த்தவிடத்து அதன் குத்துப் போல் இருக்கவேண்டும்”** என்றார் வள்ளுவர். உறு மீன் வரும்போது வாடியிருந்த கொக்கு அம்மீனைப் பிடிக்கவில்லையா? அகத்தியம், தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், குணவீரபண்டிதம், நன்னூல், இறையனார் அகப்பொருள், யாப்பருங்கலம், விசாகப்பெருமாள் ஐயர் அணியிலக்கணம் என்பனவாய தமிழ் இலக்கண நூல்கள் பற்றி அறிய முடிகின்றது. தற்புகழ்ச்சியணி, உயர்வு நவிற்சியணி என்று இரண்டு அணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. குன்றக் கூறல், மிகைபடக் கூறல் ஆகிய இரண்டும் குற்றங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நிலையில் இற்றைக்கு சுமார்

1000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பவணந்தி முனிவர் அக்கால நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து

**"மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்**
**தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்**
**மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்**
**தன்னை மறுதலை பழித்த காலையும்**
**தன்னைப் புகழ்தலும் தகும் புலவோர்க்கே"** (நன்னூல் சூத்-53) என்று கூறியுள்ளார்.


சீதையைத் தேடி வந்த இராம இரட்சுமணர்களிடம் வாயுமைந்தனான அனுமன் தன்னைப்பற்றி அறிமுகம் செய்கின்றான். அனுமனின் அறிமுகவுரை கேட்ட இராமன் அனுமனை **"சொல்லின் செல்வன்"** பெயரிட்டுப் பெருமைப் படுத்தினான். சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோலாகிய தராசு எடை (நிறை) யை மட்டுமே காட்டும். ஒரு கிலோ தங்கத்தையும் – ஒரு கிலோ இரும்பையும் சமமானவை என்று காட்டும். ஒரு கிலோ 16கரட் தங்கத்தையும் ஒரு கிலோ 24கரட் தங்கத்தையும் சமமானவை என்றே காட்டும். இவற்றின் தரத்தையோ, பெறுமதியையோ காட்டாது. மீற்றர், லீற்றர், கிலோ, எண்ணிக்கை என்பவற்றின் அளவுகோல்களைப் போன்று புலவர், புகழ்ச்சி என்பவற்றை அளவீடு செய்து தரநிர்ணயம் செய்யக் கூடிய கருவிகள் பரிசோதனைகள் இருந்தால் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். முற்காலத்திலே பொற்றாமரைக் குளத்திலே இருந்த சங்கப்பலகை, நூல்களையும் புலவர்களையும் மதிப்பீடு செய்ததாக ஐதீகம். உருவத்தைப் பார்த்தும் வினைபடுபாலாற் கொள்ளாது இகழுகின்ற போதும் ஏறுபோல் பீடுநடை போடுவதற்காக சுயவிபரத்தை கூறுவதில் தப்பில்லை என்கிறார் நன்னூலார். **"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"**. இதற்கேற்ப முடிவெடுப்பது வாசகர்களின் பொறுப்பாகும்.

எழுத்தாளர்களிடமிருந்து தரமான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(ஆசிரியர்)

- க.கிருபாகரன் -



## சோமநாதர் இராசேந்திரம்

**(தாமரைத் தீவான்)**

**தி**ருகோணமலை மாவட்டத்திலுள்ள இயற்கை எழில் கொஞ்சும், வந்தாரை இன்முகத்துடன் வரவேற்கும் தாமரைவில் கிராமத்தில் பிறந்த கவிஞர் தாமரைத் தீவானைத் "தென்றலின் தேடல்" வாயிலாக வெளிக் கொணர்வதில் "தென்றல்" பெருமையும், பேருவகையும் அடைகிறது. இவர் "தென்றல்" சஞ்சிகையோடு தனது கவிதை யாற்றலாலும், உன்னதமான - அச்சுப் போன்ற எழுத்தாலும், அன்பான கடிதப் பரிமாற்றத்தாலும் பின்னிப் பிணைந்துள்ளார்.

### சுருக்க வரலாறு

தாமரைத் தீவான் 24.07.1932 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது இயற்பெயர் இராசேந்திரம். தந்தையார் பெயர் சோமநாதர். தவமணியைத் துணையாகக் கொண்டு - அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சிற்றரசு, தமிழரசி ஆகியோரை ஈன்றெடுத்து அவர்களை உன்னத நிலைக்கு ஆக்கிய பெருமைக்குரியவர் எனக் கூறினால் அது மிகையாகாது. தாமரைவில்லில் பிறந்தாலும், ஈச்சம்தீவுக் கிராமமே இவரை வளர்த்தது. தான் பிறந்த ஊர் தன்னை வளர்த்த ஊர் ஆகிய இரண்டையும் இணைத்து

**"தாமரைத் தீவான்"** என்ற புனைப் பெயரைச் சூடிக் கொண்டார். இவரது புனைப் பெயரில் ஒட்டிக் கொண்ட தாமரைவில் கிராமம் இன்று எங்கோ தொலைந்து விட்டதாகக் கவலையோடு **"தென்றல்"** க்குத் தெரிவித்தார்.

**கல்வியும், தொழிலும்**

இவர் தனது ஆரம்பக் கல்வியை தாமரைவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றார். பின்னர் மேற்படிப்பை மூதூர் அர்ச். அந்தோனியார் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்று, எஸ்.எஸ்.ஸி. வகுப்பில் சித்தியடைந்தார். தான் கற்ற கல்வியின் பயனாக ஆசிரியர் கலாசாலைக்குத் தேர்வாகி - ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து பயிற்றப்பட்ட ஆசிரியராக 1954 ஆம் ஆண்டு திருகோணமலை ஜோசப் கல்லூரியில் கடமையேற்றார். பின்னர் பதுளை கந்தகெதர அ.த.க. பாடசாலை, திருகோணமலை கந்தளாய் அ.த.க.பாடசாலை, திருகோணமலை ஈச்சந்தீவு அ.த.க.பாடசாலை மற்றும் உப்புவெளி றோ.க.பாடசாலை ஆகியவற்றில் தனது பணியைச் செவ்வனே ஆற்றிக் கொண்டிருந்தார்.

இந்நிலையின் அவரது செயற்திறனின் காரணமாக 1972 ஆம் ஆண்டிலிருந்து அவர் 1987 இல் ஓய்வு பெறும் வரையில் திருகோணமலை ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயத்தில் அதிபராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

**இவரால் வெளியிடப்பட்ட நூல்கள்**

- **"அன்பர் நிதியத்தால்"** 1992 இல் இவரது முதல் நூலான **"பிள்ளை மொழி"** வெளியிடப்பட்டது.
- **"தாகம் கலை இலக்கிய வட்டத்தால்"** 1992 இல் **"கீறல்கள்"** என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.
- **"விஜே பதிப்பகத்தால்"** 1997 இல் **"கட்டுரை பத்து"** என்ற நூலும், 1999 இல் **"போரும் பெயர்வும்"** என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டன.
- **"அம்மா பதிப்பகம்"** 2001 இல் **"ஐம்பாலைம்பது"** எனும் நூலை வெளியிட்டது.

**எழுத்துலக ஈடுபாடு**

1952 இல் எழுதத் தொடங்கினார். 1956 இல் தான் இவரின் முதல் கவிதையான **"வெள்ளைப் பூனை"** **"சுதந்திரன்"** பத்திரிகையில் பிரசுரமானது. தொடர்ந்து வீரகேசரி, தினகரன்,சுடர், புதிய உலகம், காந்தீயம், சிந்தாமணி, முரசொலி, சஞ்சீவி, நம்தேசம், தினமுரசு, தினக்கதிர், தமிழ் உலகம், மலையகம், மழலை என் செல்வம், வெண்ணிலா, சூடாமணி, சுடர் ஒளி, சந்நிதி ஆகிய பத்திரிகைகளில் வெளியாகின. வெலித்தாஸ் தமிழ்ப்பணியிலும், பி .பி . ஸி வானொலியிலும் களங் கண்டன. அதுமட்டுமன்றி, உள்ளூரில் **"தென்றல்"**, கேணிச்சுடர், ஈச்சம்பழம், பதுமை நெஞ்சங்கள், தாகம், செங்கதிர், வசந்தம், சிவநெறி போன்ற கையெழுத்து, தட்டச்சு, அச்சுச் சஞ்சிகைகளிலும் களங்கண்டுள்ளதாகப் பெருமிதத்தோடு **"தென்றலுக்கு"** தெரிவித்தார்.

பழந்தமிழ் இலக்கியங்களை ஊன்றிக் கற்றவர். திருக்குறளை ஒப்புவிப்பதில் ஒப்பற்றவராகத் திகழ்கிறார். சிந்தனையைத் தூண்டும் வகையில் பேசும் ஆற்றல் மிக்கவர். இவர் எவரையும் மனம் புண்படப் பேசுவதில்லை. இவரது எழுத்துக்கள் யதார்த்தமானவை. தாமும், தம் மக்களும் அடைந்த அவலங்களை இவரின் எழுத்துக்கள் துல்லியமாக வெளிக் கொணர்ந்துள்ளன. கவிதையை முழு மூச்சாகக் கொண்டு வாழ்பவர். இவர் ஏறாத கவியரங்கமே இல்லை எனலாம். இவர் கவிதை சொல்லும் பாங்கே தனி. இவர் ஒலிவாங்கியைப் பிடித்துக் கொண்டு கவிதை சொல்லத் தொடங்கினால், அரங்கமே சுறுசுறுப்பாகி விடும்.

**இவர் பெற்ற கௌரவங்கள்.**

- 1991 இல் **"தாகம் கலை இலக்கிய வட்டம்"** வழங்கிய **"கௌரவப் பட்டம்"**
- 1996 இல் **"குறளமுதத்தினால்"** வழங்கப்பட்ட **"குறள் திலகம் விருது"**
- 1996 இல் **"தமிழ் வளர்கலை மன்றத்தால்"** கௌரவிக்கப்பட்டார்.
- 1999 இல் ஆண்டு விழாவின் போது **"திருகோணமலை இந்து இளைஞர் பேரவையால்"** கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையின் ஆற்றல் மிக்க - மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய - இசை - நாடக - நாட்டிய - கிராமிய வைத்தியத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையிலேயே **"தென்றலின் தேடல்"** எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



☆ அண்மையில் இடம்பெற்ற (2017) கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழாவில் **"கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்"** இவரால் வெளியிடப்பட்ட **"பொன்னகம் மட்டுமாம்"** எனும் கவிதைத் தொகுதிக்கு வழங்கிய **"சிறந்த தமிழிலக்கிய நூலுக்கான பரிசு"**.

வன்செயல்களின் போது இவர் தனது பொக்கிஷங்களாகக் கருதிய அகநானூறு, புறநானூறு, மலைப்பா, உண்மை அம்பாள் காவியம், கீறல்கள், விநாயகமாலை, 700 நூல்கள், 27 கவிதைத் தொகுப்புக்கள், 13 மேடைக் கவி ஏடுகள் என்பன அழிந்து போனதை நினைக்கும் போது கவலை ஏற்படுவதாக **"தென்றலுக்கு"** மனவேதனையோடு தெரிவித்தார்.

இவ்வாறான பேரிழப்புகளைத் தாங்கிக் கொண்டு தனது 85 ஆவது பிறந்தநாளைக் கடந்து வாழும் **"தாமரைத் தீவானின்"** எழுத்தாக்கல் முயற்சிகள் எதுவித தங்கு தடையுமின்றி நடந்தேற வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளைத் **"தென்றல்"** வேண்டி நிற்கிறது.

அகவிருளை நீக்கி யெமக்கு
அறிவொளியை ஏற்றிடும்
நிகரற்ற ஆசான் தன்னை
நினைந் தொருக்கா பாராட்ட
வரும் நாளே ஆசிரியர் தினம்
வாழ்த்தியவரை வணங்கிடுவோம்!

பெற்றெடுத்த அன்னை தந்தைக் கடுத்து
பிரியமுடன் எமக்குக் கல்வி புகட்டும்
உற்ற நண்பன் ஆசிரியவரை
உளம் கனிந்து வாழ்த்திடுவோம்
இத்தரையில் அன்னை தந்தை குருவுக்கு
இணையெதுவும் இல்லையில்லை!

# ஆசிரியர் தினம்!!!



-கவிஞர் க.ரெட்ணையா, கன்னன்குடா-

கல்வியெனும் படகில் ஏற்றி
கரை சேர்க்க நம்மை யெல்லாம்
அல்லும்- பகலும் பாடுபடும்
அன்புத் தெய்வம் ஆசிரியர்
சொல்லில் இனிமை சேர்த் தெமக்கு
சொந்தமாய்த் தொழில் செய்ய வழி காட்டிடுவார்!

கல்லையும் கரைய வைக்கும்
அருமை யுள்ளம் படைத்தவர்கள்
கல்வி கற்றதனால் தானையா – இன்று
கர்னன் போல் வாழ்கின்றார்கள்
நல் மனதோடு கடமையாற்றும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து
நன்னாளாம் ஆசிரியர் தினத்தில் பாராட்டி வாழ்த்திடுவோம்!!!

- வீ.ஏ.திருஞானசுந்தரம் -




# மின்பொறி ஊடகங்களில் செய்திச் செல்வி தாக்கம்

**ஊ**டகங்கள் – அச்சு ஊடகங்கள் எனவும், மின்பொறி ஊடகங்கள் எனவும் வகுக்கப் பெறும் மரபொன்று உண்டு. தொழில்நுட்ப விருத்தியின் பின்னரும், கணினிப் பயன்பாட்டின் பின்னரும் இவ்வாறு வகுக்க முடியா தெனினும், இப்பொழுதும் கூட இரு வகுநிலைகளையும் எடுத்துக் கூறுவர். மின்பொறி ஊடகங்கள் எனக் கொள்ளப்படுபவை வானொலி , தொலைக்காட்சி திரைப்படம் ஆகியனவாம்.

ஏறத்தாழ மூன்று, நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் – ஆங்கிலத் திரைப்படங்களைக் காட்டுவதற்கு முன்னர் செய்திகளைக் காட்டுவது மரபாக இருந்தது. இப்பொழுது அந்த நிலையில்லை. தென்னாசிய நாடுகளைப் பொறுத்த வரை செய்திகளைப் பரப்புவதில் வானொலியும், தொலைக்காட்சியுமே முக்கியமான இடம்பெறுகின்றன.

செய்திகளை அறியத்தரும் ஊடகங்களில் அதிக அளவிலான மக்களை அடையக் கூடிய ஊடகங்களாக வானொலியும், தொலைக்காட்சியுமே

உள்ளன. அறிவு மட்டத்தின் அடிப்படையில் மக்களை மேலிருந்து கீழாக பட்டியலிட்டால், ஆகவும் கீழ் மட்டத்தில் உள்ளவர்களையும் அதாவது பாமர மக்களையும் எளிதாகக் கவரக் கூடிய ஊடகங்கள் அவை என்பர்.

இதன் காரணமாக அச்சு ஊடகத்தை விடவும், சிறப்பியல்புகளைக் கொண்டிருக்க வேண்டிய தேவை தொலைக்காட்சி மற்றும் வானொலிக்கு இருக்கிறது.

வானொலியின் பிரதான இயல்பு அது காதால் கேட்கப்படுவது மட்டுமே. வானொலியை ஒரு பார்வையற்ற சாதனம் (Blind Media) என்பர். வானொலியில் பேசுபவரின் குரலைக் கேட்கும் எவரும் அந்தக் குரல் தரும் செய்தியையோ, தகவலையோ தமது மனக்கண்ணில் ஓவியமாகத் தீட்டாமல் இருப்பதில்லை. இது வானொலிக்கே உரிய தனிச் சிறப்பாகும். வானொலி ஒரு நேர் கோட்டு ஊடகமாகவும் (Linear) இருக்கிறது. அதாவது வானொலி ஊடகத்தின் ஊடாக ஒலிபரப்பப்படும் விடயம் நேயர்களை ஒரே தடவையில் சென்றடைவது அவசியமாகும். சொல்லப்படும் விடயம் தெளிவில்லாமல் இருக்கும் பட்சத்தில் வாக்கியத்தை ஆரம்பத்தில் இருந்து மீண்டும் வாசித்து, விளங்கிக் கொள்ள வழிவகுக்கும் பத்திரிகையின் வசதி வானொலி ஊடகத்திற்கு உரித்தானதல்ல.

ரசிகனின் மனவெளியில் காட்சிப் படிமத்தை உருவாக்கக் கூடிய ஆற்றலும், நேர்கோட்டுத் தன்மையும் வானொலியின் சிறப்பம்சங்கள். இந்த அம்சங்களே அதற்கான வரைவிலக்கணமும் ஆகும்.

கேட்பது எனும் பொழுது யார்? யார்? கேட்பது என்பது முக்கியமான அம்சமாகும். கல்வித் தகைமையை உடையவர்கள் மாத்திரமல்லாமல், குறிப்பிட்ட மொழியைப் பேசுபவர்கள் எல்லோருமே கேட்பார்கள். படித்தவர்களும் கேட்கலாம். படிக்காதவர்களும் கேட்கலாம். தலைநகரில் உள்ளவர்களும் கேட்கலாம்.

எனவே வானொலியின் மூலம் நேயர்களுக்கு அறியத் தரக்கூடிய செய்திகளைத் தேர்ந்தெடுப்பது முதற் கொண்டு செய்திகளைச் செவ்வி தாக்கம் செய்து நேயர்களை அடையச் செய்யும் வகையில் பல்வேறு விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

வானொலி என்பது சகலரையும் அடையக் கூடிய ஊடகமாக அமைவதால் அதில் பயன்படுத்தப்படும் மொழிக்கென சில பண்புகள் இருக்கின்றன.

முதலாவது பண்பாக அமைய வேண்டியது எளிமை (Simplicity) ஆகும். மேற்குலக ஊடக மொழியில் இதனைக் "Kiss" என்பார்கள். இதன் விரிவான விளக்கம் "Keep It simple and short" என்பதாகும்.

மேலைத்தேய ஊடகப் பயிற்சிக் கல்லூரிகள் ஒரு வாக்கியத்தில் குறைந்தபட்சம் 35 சொற்கள் மாத்திரமே இடம்பெற வேண்டும்- என்ற நியமத்தைக் கடைப்பிடித்து வருவதையும் குறிப்பிடலாம்.

வானொலிச் செய்தி எந்தளவு எளிமையாக, எந்தளவு குறுகியதாக செவ்விதாக்கம் செய்யப்படுகிறதோ, அந்தளவுக்கு அது மக்களைச் சென்றடையக் கூடும் என்பது வெள்ளிடைமலை.

அதேவேளையில் வரும் வாக்கியங்கள் நீண்ட வாக்கியங்களாக - பெயர் விசேடணங்கள், வினை விசேடணங்கள் என வாக்கியத்தை நீட்டாமல் அமைத்தல் முக்கியமாகும். ஆங்கில மரபிலே கூறினால், "Adjectival, Adverbial, Clauses" பெரிதும் தவிர்க்கப்பட வேண்டும். அத்தகையவை அத்தியாவசிய மேயானால், தனித் தனியாகக் கூறுதல் வேண்டும். இதனாலேயே ஒரு செய்தியைக் கூறிவிட்டு அதன் பின்புலத்தைக் கூறும் பொழுது **"இது இவ்வாறு வந்ததென நினைவூட்டத்தக்கது - குறிப்பிடத்தக்கது"**- எனக் கூறுவர். இதனை அன்றாடச் செய்தி ஒலி / ஒளி பரப்புகளின் பொழுது இடம்பெறுவதைக் காணலாம்.

தேர்ந்த ஊடகவியலாளர்கள் வானொலி / தொலைக்காட்சி ஊடகங்களில் செய்தி எழுதுவதற்காக சில நுணுக்கங்களைக் கடைப்பிடிப்பது வழக்கமாகும். செயப்பாட்டு வினையைத் தவிர்த்து, செய்வினையில் இடம்பெறக் கூடிய வசனங்கள், தேவையற்ற தகவல்களைத் தவிர்த்தல், இரட்டை எதிர்மறைச் சொற்களைத் தவிர்த்தல் போன்ற நுட்பங்களைக் குறிப்பிட முடியும்.

இவ்வாறு நோக்கும் பொழுது செவிப்புல ஊடகங்கள் என்றாலும் கட்புல, செவிப்புல ஊடகங்கள் என்றாலும் அவற்றிலே எடுத்துக் கூறப்படுவன இறுக்கமானவையாக நன்கு செவ்விதாக்கப் பெற்றனவாக அமைதல் வேண்டும்.

"**Edit**" என்ற ஆங்கிலப் பதத்திற்கு "**ஒன்றினைத் தொகுத் தெடுத்தல்**" எனப் பொருள் கொள்ளலாம். அவ்வாறு தொகுக்கும் பொழுது செம்மை கெடாமல் தொகுத்தல் முக்கியமாகும்.

வானொலி ஒலிபரப்புச் செய்தியில் பெரும்பாலும் மூலப்பிரதிகள் ஆரம்ப காலங்களில் ஆங்கிலத்தில் தயாரிக்கப்படுவது வழக்கம். இதனால் அவற்றைத் தமிழிலோ, சிங்களத்திலோ மொழி பெயர்க்கும் பொழுது மொழியின் இயல்புக்கு ஏற்ற முறையில் மொழி பெயர்க்க வேண்டும்.

அண்மையில் வானொலியில் செய்தி வாசித்த ஒருவர் "**Environment friendly**" எனும் பதத்தை "**சூழலுக்குச் சிநேகமான**" என்று மொழி பெயர்த் திருந்தார். அத்தகைய மொழி பெயர்ப்புக்கள் தவிர்க்கப்பட வேண்டும். செய்தித் தயாரிப்பின் போது, ஒரு விடயம் அறிவிக்கப்பட்டது என்பதற்கும், தெரிவிக்கப்பட்டது என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். "அறிவித்தல்" என்பது "**Announcing**"; "தெரிவித்தல்" என்பது "**Reported**" என்றும் குறிப்பிடலாம். ஆங்கிலத்தில் "**It was announced**" என்பதற்கும், "**It was reported**" என்பவற்றுக்குமிடையே உள்ள வேறுபாடு மிகப் பெரியது என்பதை மனங் கொள்ளல் வேண்டும்.

ஒலி / ஒளி ஊடகங்களில் பிற்காலத்தில் – ஏன்? இப்பொழுதும் கூட அனேகமான செய்திகள் சிங்கள மொழியிலேயே எழுதப்படுகின்றன. இதனால் மும்மொழிகளில் செய்தி ஒலி / ஒளி பரப்பை நடத்தும் நிறுவனங்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளன. சிங்கள மொழியில் தயாரிக்கப்படும் செய்திப் பிரதிகள் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் படுகின்றன. பின்னர் அவை தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன. மொழி பெயர்ப்பாளர்கள் சிங்கள மொழியிலும், தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர் களாயின், மொழி பெயர்த்தல் மிகவும் சுலபமானது மட்டுமல்லாமல், வேகமாக உரிய நேரத்தினுள் செய்தியறிக்கை தயாரிக்கப்பட்டு, ஒலிபரப்புவதற்குத் தயாராகி விடும். அல்லாது போனால், பல சிரமங்களுக்கும், தவறான சொற்பிரயோகங்களுக்கும் உட்பட நேரிடும்.

இந்நிலையில் செவ்விதாக்கம் செய்வோர் மும்மொழி அல்லது இரு மொழிப் பாண்டித்தியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். எனவே ஆங்கில மொழியில் சந்தேகமற வாசித்து, அதன் பின் அவற்றைத் தொகுத்து, தன் மொழியில் கூறுதல் வேண்டும். ஆனால் இவ்வாறு

செய்வதில் மிகப் பெரிய ஆபத்தபாயம் (Risk) உண்டு. ஆனால் அதனை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

வானொலி , தொலைக்காட்சிச் செய்திகளிலும் இரண்டு முக்கிய அம்சங்கள் உண்டு. ஒன்று தலைப்பு. மற்றையது அதன் கீழே உள்ள விரிவாக்கம். தலைப்பு குறுகிய முறையிலேயே அமைந்திருக்கும். (உதாரணம்) நாளை விடுமுறை தினம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விரிவாக்கத்தின் போது தான் நாளை செவ்வாய்க்கிழமை அரச - தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், வங்கிகள் ஆகியன மூடப்படும் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது - என்று சொல்வார்கள். இப்பொழுது நாம் தந்திகள் அடிப்பதில்லை. எனினும் நம்மிடையே கைத்தொலைபேசியில் (Cell – phone) இல் வாக்கியங்கள் குறுந்தகவல்களாகவே அமையும். இதனை ஆங்கிலத்தில் SMS என்பர்.

இலங்கையில் அச்சு ஊடகங்களின் வரலாறு 100 ஆண்டுகளைக் கடந்ததாகக் காணப்படுகிறது. அந்த நீண்ட காலப்பகுதியின் வளர்ச்சிகளை அச்சு ஊடகத்துறை உள்வாங்கிக் கொண்டிருப்பதை சமகாலப் பத்திரிகைகளில் செய்தி அறிவிக்கப்படும் விதத்தில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது. இலங்கையில் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களை ஆராய்ந்தால், எத்தனை நிறுவனங்கள் செய்தி செவ்விதாக்கம் சார்ந்த ஒழுக்க நெறிக் கோவையொன்றை அல்லது வழிகாட்டல் கோவையொன்றை பின்பற்றுகின்றன என்ற கேள்வி எழுகிறது.

இந்த வரம்புகள் மீறப்படுகையில் திரிவுபடுத்தல்கள், மிகைப்படுத்தல்கள் போன்றவை இயல்பாக இடம் பெற்றுள்ளதை உள்ளபடி கூறல், நடுநிலையாகச் செயற்படுதல் போன்ற ஊடக விழுமியங்கள் மீறப்படும் சூழ்நிலை உருவாகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் (அரச வானொலி), சூரியன், சக்தி, வசந்தம், வர்ணம் போன்ற (தனியார்) வானொலிகள் தத்தம் நிலைப்பாட்டிற்கேற்ப செய்திகளின் முக்கியத்து வத்தையும் எடுத்துக் கூறி வருகின்றன. இந்த முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு செய்தி செவ்விதாக்கத்தில் ஊடகவியலாளர்கள் அதிக கவனம் செலுத்துவதும் அவசியமாகிறது.



# சுனாமி தந்த பாடம்

-மருதூர் ஜமால்தீன்-

கடற்கோள் சுனாமியாய்க்
கண்ணெதிரே கனவுயிரை
உடன் பறித்துத் துயரீந்த
ஆண்டிங்கு பதின் மூன்றாய்!

உயிரற்று உறவற்று
உணர்விழந்த சோகத்
துயரின்னும் மாறாது
துவழ்கிறது நெஞ்சம்!

இனமென்ன மொழியென்ன
எல்லோரு மொன்றாய்ப்
பிணமாய் நீருக் கிரையாகிப்
பிரிந்த வுயிர் பலநூறு!

மனிதத்தை நாம் மறந்து
மகிழ்ந்ததுவா குற்றம்
புனிதனாய் வாழாது
புவி கெடுத்தா நின்றோம்!

எதுவென்றே தெரியாது
ஏங்கி நின்றழுதோம்
சுதியென்ன செய்தோமோ
சாவுப் பலி கொடுத்தோம்!

இறை சீற்றம் தண்டனையாய்
எப்படியும் வரலாம்
மறை சமய வழி செல்ல
மனத்திடமே கொள்வோம்!

இனப் பகைமை இழி செயலை
இதயத்தில் நீக்கி
மனத் தூய மனிதத்தை
மாண்புறவே ஏற்போம்!

நல்லறிவால் நல்லவனாய்
நாளும் பணி செய்யின்
கொல்ல வரும் இயற்கையதும்
கன தூரம் செல்லும்!

இயற்கை தருமழிவுகளும்
எங்களுக்குப் பாடம்
துயர் நீங்கத் தூயோனை
தொடர்ந் துணர்ந்து வாழ்வோம்!!!



-சிறுகதை-

—"வீசுதென்றல்" தாழை. செல்வநாயகம்—

# புதிர்ச் சோறு

களுவாஞ்சிகுடியிலிருந்து வெல்லாவெளியூடாக பாலயடிவட்டைக்குச் செல்லும் பிரதான பாதையில் வெல்லாவெளிப் பொலிஸ் நிலையத்தையடுத்து வலது புறமாகத் தெரியும் வாழைத் தோட்டமும், வயல்வெளியும், தென்னந் தோப்பும், மாந்தோப்பும் கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் மேய்ந்து கொண்டிருக்கும் மாட்டுப் பட்டியும் போடியாருக்குச் சொந்தமானது தான்.

இங்குள்ளவர்களின் பெயர்களின் பின்னால் **"போடி"** என்ற பதம் இணைந்திருக்கும். அவ்வகையில் இவரது பெயர் **"பாலிப்போடியார்"** என்பதாகும். சாதாரண போடிகளை விட, இவர் உண்மையான போடியாரே. **"வேலிக் கட்டை என்றாலும் போடிப் பட்டம் போகாது"** என்பது இப்பகுதியில் வழக்கிலுள்ள பழமொழியாகும்.

வயல் வெளிகளில் காட்டுக் கம்புத் தடிகளைக் கொண்டும், ஓலைக் கிடுகு, இலுக்குப்புல், வைக்கோல், ஆகியவற்றைக் கொண்டும் அமைக்கப்படும் குடிசைதான் **"வாடி"** எனப்படும். ஆனால் போடியாரின் வாடி நாட்டு ஓடுகளையும், கடைசல் மரத் தூண்களையும் கொண்டு கட்டப்பட்ட கல் வீடாகும். இங்குள்ளவர்கள் **"போடியார் வாடி"** என்று கூறுவதனையே வழக்கமாகக் கொண்டு விட்டனர்.

இவருக்குப் படுவான்கரை முழுவதும் நெல் வயல்களுண்டு. **"சேனநாயக்கா சமுத்திரத்தின்"** வலது கரை வாய்க்கால் – போடியாரின் வயல்

நிலங்களைத் தாண்டித்தான் மற்றைய பகுதிகளுக்கு நகர்ந்து செல்கிறது. இதனால் இங்கு நீர்ப் பஞ்சமில்லை. இரண்டு போகங்களும் செய்யும் பூமி. நெல்லிக்காடு, திக்கோடை, மாவடிமுன்மாரி, பனிச்சையடி முன்மாரி, 36 ஆம் கொலனி ஆகிய வயற் பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் இவருக்குரியதாகும்.

வயல் வேலைகள் தொடங்கி விட்டால் போடியாரின் மாட்டுப்பட்டி புழுகுநாவிக் குளத்துப் பக்கம் சென்று விடும். கெவுளியாமடுவில் தான் மேச்சல் தரையுள்ளது. தம்பிமுத்தரின் எருமை மாட்டுப் பட்டியும் புழுகுநாவியில் தான் உள்ளது.

தம்பிமுத்தர் போடியாருக்கு "கொழுத்த மச்சான்" முறையானவர். தம்பிமுத்தரின் சகோதரி "மாதம்மை" தான் போடியாரின் மனைவி. அவள் பனங்குத்தி மாதிரியிருப்பாள். நெற்றியில் மூன்று விரல்களால் திருநீறு சாத்தி அழகாயிருப்பாள். தலையை வாரி கொண்டை போடாது நின்றிருந்தால், மதுரையை எரித்த கண்ணகையின் கோலத்திலிருப்பாள். குளத்துக்கருகில் மாட்டுப் பட்டியும், பால்வாடியும், கன்றுக் காலையும் ஒரே வேலிக்குள்ளாகத்தான் அமைந்துள்ளது. வாடியில் தினமும் பாலுக்கும், தயிருக்கும் பஞ்சமில்லை. முட்டியுடன் வருபவர்களுக்கும், போத்தலுடன் வருபவர்களுக்கும் முத்தனும், மாதம்மையும் முகம் கோணாமல் இலவசமாகவே பாத்திரம் நிறையப் பாலூற்றிக் கொடுப்பார்கள். பால் காச்சும் "அண்டாச் சட்டியினுள்" எப்போதும் பாலாடை கிடக்கும். மாதம்மை பருவமடையாத வயதில் பண்டாரியா வெளியிலிருந்து தன் தமையனுடன் அடிகெரியல் சைக்கிளில் வாடிக்குச் சென்று வருவாள். வாடிக்குப் போற வழியில் குளத்தங்கரையில் கொழுத்துக் கிடக்கும் பொன்னாங்காணிகளை மடி நிறைய நோண்டிக் கொண்டு வந்து துப்பரவு செய்து சட்டிக்குள் கிடக்கும் பாலாடைகளையும் அள்ளிப் போட்டு அடுப்பில் வைத்து, பிரட்டி எடுத்தாளென்றால், அதன் ருசியை எவராலும் மறக்க முடியாது.

பின்னேரத்தியாலத்தில் பழுகாமத்திலிருந்து குளத்திற்கு வரும் மீன் வீசுபவர்கள் "முண்டான் மீன்" வீசுவார்கள். அவள் கேட்காமலேயே அள்ளியள்ளிக் கொடுப்பார்கள். மீனை அளவுக்கு எடுத்து பால் சொதி வைத்து விட்டு, கருவாடாக்கி விடுவாள். காய்ந்த பின்னர் சாக்கில் கட்டி வாடிக்குள் தூக்கி விடுவாள். கறிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால், கருவாட்டுடன் விளாம்புளி போட்டுச் சுண்டல் ஆக்கி விடுவாள். சுண்டலை நினைத்தாலே வாயில் ஜலம் ஊறும்.

"என்ன மாதம்ம..! சட்டிக்குள் பால் கிடக்கா? இல்லாட்டி மோர்த்தண்ணி எண்டான ஊற்றி வை. மாட்ட அவிட்டு மேய விட்டுத்து வாறன்" என்று கூறிவிட்டுச் சென்றான் அலம்பல் ஏத்தும் அருளானந்தம். திவுலானைக் காட்டிலிருந்து இந்த வழியால் தான் அலம்பல் வண்டில்கள் கோச்சிப் பெட்டிகள் போல் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கும். கள்ளமரம் ஏற்றும் வண்டில்காரர்களின் கள்ள வழியும் இதுதான். வனஅதிகாரிகள் சிலருக்கு இலஞ்சம் கொடுத்து விட்டுச் செல்வார்கள். சிலரிடம் சிக்கியும் விடுவார்கள். அழகானந்தத்திற்கு களுதாவளையில் வெற்றிலைத் தோட்டம் உண்டு. மாதம்மை மேல் அவனுக்கு ஒரு கண். அவன் என்னதான் கண்ணையுருட்டிப் பேசினாலும் அவளுக்கு அவன் மேல் விருப்பமில்லை. அவன் வெற்றிலைத் தோட்டக்காரன்தானே..! தான் ஒரு போடியாருக்குத்தான் வாழ்க்கைப்பட வேண்டும்....! என்று மனதுக்குள் நினைத்துக் கொள்வாள். பாலிப்போடியாரைக் கலியாணம் செய்யும் முன்னர் குளத்துக்குள் ஆடிய ஆட்டங்களையெல்லாம் அசைபோட்டுக் பார்த்துக் கொண்டாள்.

படுவான்கரை ஏரியாவில் "அழகுராணிப் போட்டி வைத்தால் நிட்சயமாக அவள்தான் அழகுராணியாக வந்திருப்பாள். கறுப்பு என்றாலும் கஸ்தூரிதானே! அவளுக்கு இப்போதும் அவ்வளவு வயது போகவில்லை. ஐம்பது வயதைக்கூட அவள் எட்டிப் பார்க்கவில்லை".

தாந்தாமலைக் கோவில் திருவிழா தொடங்கிவிட்டால் அவள்பாடு கொண்டாட்டம்தான். தொங்கோட்டமும், சில்லரைப் பாய்ச்சலுமாயிருப்பாள். உற்சவ காலங்களில் நாற்பதுவட்டைச் சந்தியில் மண்டுக் கொத்துகளால் பந்தல் அமைத்து, அலங்கரித்து, மோர்த் தண்ணிப் பந்தல் போட்டுத் தானம் செய்வாள். வருடா வருடம் அவள் தலைமையில் தாந்தாமலையில் தண்ணீர்ப் பந்தல் நடைபெறும். கதிர்காமக் கந்தனின் தீர்த்தோற்சவத்துடன் தான் தாந்தாமலைத் தீர்த்தமும் நடைபெறும். திருவிழாக் காலங்களில் இரவில் காப்புக் கடைப் பக்கம் சுற்றித் திரிவாள். வளையல் காப்புகளை நிறம் நிறமாக வாங்கி இரு கைகளிலும் முழங்கை வரையில் போட்டு அழகு பார்ப்பாள். அந்த நாட்களில் அவள் பின்னால் சுற்றித் திரியும் கூட்டத்தில் முதன்மையானவன் தான் அழகானந்தம். கோவில் கொடியேற்றம் தொடங்கி விட்டால், காட்டிற்கு அலம்பல் வெட்டப் போகமாட்டான். தனது மாட்டு வண்டிலுக்குக் கூடுகட்டி தான் பிறந்த ஊரான வெல்லாவெளிக் கிராமத்திலுள்ள தாய், தந்தை, சகோதரிகளை நாளாந்தம் தாந்தாவுக்கு ஏற்றி இறக்குவான்.

காப்புக் கடையடியில் அவளை நோட்டம் விட்டு, அவள் பின்னால் நின்று "உனக்கு கண்ணாடி வளையல் காப்பு, இல்லாட்டி பாவக் கொட்டக் காப்பு வாங்கித் தரட்டா புள்ள.? "சீ.போடா"நாயே..! எலும்புச் சுங்கான், அகப்பக்காம்பு போல ஆள். இவருக்கு இருக்கிற ஆசையைப் பாரு.." அண்ணாச்சக் கூப்பிடட்டா..? அண்ணன் என்று சொன்னதும் நின்ற இடத்துக்கும் சொல்லாமல் அவன் ஆள் மாறி விடுவான். தம்பிமுத்தரைக் கண்டால் அவனுக்குப் பயம். இப்படிக் கடந்த காலச் சம்பவங்களையெல்லாம் அடிக்கடி நினைத்துப் பார்ப்பாள்.

பாலிப்போடியாரின் வயலில் அறுவடை முடிந்து சூடடித்த பின்னர் களம் பொலிந்த கையோடு களத்தில் வைத்துப் போடியார் தன் கையாலேயே அம்பக்காரியின் கூலி, உப்பட்டி பிரட்டியவர்களின் கூலி, களத்திற்கு வரும் ஏழைகளின் கூலி, வட்டவிதானையின் கூலி போன்றவற்றை எல்லாம் கவனித்து நெல்லை அளந்து கொடுத்து விட்டு, மேலதிகமாகவும் தானம் செய்து விட்டு, மிகுதி நெல் அவரது வாடிக்குப் போய்ச் சேரும் வரையில் களத்தில் நிற்பார். வருடாந்தம் மாசிமகத் தீர்த்தத்திற்கு மறுநாள் புத்தரிசி குத்தி பால், தயிர், அறுசுவையான கறிகளோடு போடியார் வாடியில் புதிர்ச்சோறு சாப்பிடும் முறை வழக்கத்திலுள்ளது.

புதிர்ச்சோறு சாப்பிடும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் போடியாரின் வெடிக்காரன் செல்லையன் துவக்கையும் தேவையான அளவு தோட்டாக்களையும் அள்ளிப் போட்டுக் கொண்டு, சகல சாப்பாடுச் சாமான்களுடன் துணைக்கு முல்லைக்காரனையும் அணைத்துக் கொண்டு தங்கு வெடிக் காட்டுக்குச் செல்வான். சோலைக் காட்டில் ஊத்து மடுக்களையண்டிய பகுதியில் மரத்தின் மேலும், தரையிலும் காற்று விழுவதைப் பார்த்து ஒளிப்பரணகளைத் தயார்படுத்தி, அதிலிருந்து காட்டு மிருகங்களை வேண்டிய மட்டும் வேட்டையாடுவார்கள்.

தண்ணீர் தேடித் தாகத்துடன் மடுவுக்கு வரும் மிருகங்கள் எல்லாவற்றையும் செல்லையன் சுடமாட்டான். கலைமரை, கலைமான், முள்ளம்பன்றி போன்றவைகளை மாத்திரம் தான் தெரிந்து சுடுவதில் இவன் கெட்டிக்காரன்.

அந்த இடத்திலேயே சிறாம்பி கட்டி, வேட்டையாடிய மிருகங்களை எல்லாம் உரித்து, வார்த்து எடுத்து சிறாம்பியில் போட்டு, நெருப்பில் வாட்டி, சூட்டு இறைச்சியாக்கி சாக்கில் கட்டி போடியாரின் வாடிக்குத் திரும்புவான்.

செல்லையன் தங்கு வெடிக் காட்டில் இருக்கும் நாட்களில் தனி ஈரல் கறி மட்டும் தான் சமைப்பான்.

அன்று போடியார் வாடியில் "புதிர்ச் சோறாம்" என்று கேள்விப்பட்டதும், கனகசபை ஐயாவும், நாகமணி விதானையாரும், சின்னவன் அதிபரும் வந்து விட்டார்கள். போடியார் வாடிக்கு வருடா வருடம் வந்து புதிர் சாப்பிடு பவர்களில் மூவரும் முன்னணியில் உள்ளவர்கள். விவசாயத் திணைக் களத்தில் உயர் அதிகாரியாகவுள்ள கனகசபை ஐயா போடியாருக்கு ஆலோசனை வழங்குவது மாத்திரமன்றி, உதவிகள் பலவும் செய்வார். சின்னவன் அக்கிராமத்துப் பாடசாலை அதிபர். ஊர் விதானையார் நாகமணியர். இவருக்கு எவரும் கணக்குவிட முடியாது. மூவருக்கும் போடியார் வாடியில் புதிர்ச்சோறு சாப்பிடுவதில் அலாதிப் பிரியம்.

இரண்டு கிழமைக்கு முன்னரேயே முல்லைக்காரன் வயல் வெட்டையிலிருந்து "புதிர்காவி" வந்து விட்டான். போடியார் வாடியில் புதிராம் என்று கேள்விப்பட்டதும், அந்த ஊர்ச் சனங்களும் படையெடுத்து வந்து விடும். பிள்ளை, குட்டிகள் வந்த கையோடு மாமரத்தின் கீழ் போடப்பட்டுத் தயாராகவிருக்கும் பனையோலைப் பாய்களில் வரிசையாக அமர்ந்து விட்டார்கள். குசினிப் பக்கமிருந்து வரும் கறிவாசனை அங்குள்ளவர்களின் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது.

"என்ன போடியார்..! புதிருக்கு என்ன கறி சமைக்கிறயள்..?" என்று கேட்டார் கனகசபை ஐயா. அவர் கேட்கும் வழக்கமான கேள்வி தான்.

அதற்குப் போடியார் "மணலைமீன் குளம்பிருக்கு
மணக்கச்சின பொரிச்சிருக்கு
புளியாணம் வச்சிருக்கு. கொஞ்சம்
பொறுங்க ஐயா சாப்பிடலாம்".- என்று பாடினார். போடியார் நாட்டார் பாடல் பாடுவதில் கெட்டிக்காரர். வயிலில் அருவி வெட்டும் போதும், சூடடிக்கும் போதும், பொலி தூற்றும் போதெல்லாம் அங்கு நின்றவாறு கவி பாடிக் கொண்டிருப்பார். இவையெல்லாம் அந்தக் கிராமத்தவர் அறிந்த விடயம்.

என்ன போடியார் இந்த முறை சூட்டிறைச்சி கிடைக்கல்லையா? என்றார் மீண்டும் கனகசபை ஐயா. ஏன் இல்ல.. வெடிக்கார செல்லையன் தங்குவெடி காட்டிற்குப் போய்த் தொகையாக இறைச்சி கொண்டு வந்திருக்கான் ஐயா.! போகக்குள்ள எல்லாருக்கும் தாறன் கொண்டு போங்களன். போடியார்

இன்னொரு விசயம் சொல்ல மறந்திட்டன். நான் அடிக்கடி கொழும்புக்குப் போய் வாறவன் தானே. உங்களுக்கும் அது தெரியும். அந்தச் சமயத்தில தமிழ்ச் சங்கத்திற்கும் போக மறக்க மாட்டன். அது எண்ட வழக்கம். அப்ப வெல்லாம் சேகரன் ஐயா என்னைச் சந்திப்பாரு. "கனகசபையாரே உங்கட ஊர்ப் பக்கம் இறைச்சி , பால், தேனுக்குப் பஞ்சம் இல்லை தானே. மற்றப் பயணம் வரக்குள்ள சூட்டிறைச்சி அம்பிட்டா ஒரு கிலோ எண்டாலும் கொண்டு வாவன். மிச்சம் கவனமாகக் கொண்டு வரணும்" என்று சொல்லுவாரு. "ஓமோம் நானும் கேள்விப்பட்டிருக்கன்".

எண்ட பெடியனுக்கும் கொழும்பில இருந்து தபால்ல ஒரு புத்தகம் வரும். புத்தகத்தின்ர பேருதான் ஞாபகமில்லை. ஓம் போடியார்! அந்த ஐயா தான்.


போடியாரின் பொஞ்சாதி மாதம்மை அதற்கிடையில் புதிர் பிசைந்து விட்டு, அங்கு பசியுடன் அமர்ந்திருக்கும் பிள்ளைகள், ஆட்களுக்கெல்லாம் கொழுக்கட்டை போல் பிடித்து, கோவில் பிரசாதம் கொடுப்பது போல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

புதிர்ச்சோறு கொடுக்க முன்னர் "புதிர் பிசைந்து ஊட்டுதல்" இப்பகுதி மக்களின் மரபுவழி வழக்காறு. ஆக்கியெடுத்த புது அரிசிச் சோற்றுடன், சமைத்த பல்விதக் கறிகளையும்,தயிர், பால், முக்கனிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரு பாத்திரத்தில் போட்டுப் பிசைந்தெடுக்கும் செயல் முறை தான் "புதிர் பிசைதல்" எனப்படுவது. இது தேவாமிர்தத்திற்குச் சமமானது. புதிர்ச்சோறு உண்பதும், புதிர் பிசைதலும் இப்போது மக்களிடையே அருகிப் போய் விட்டன. பிள்ளைகள், பெரியவர்கள் அனைவருக்கும் தலைவாழை இலையில் புதிர்ச்சோறு வழங்கப்பட்டன. சாப்பிட்ட பின்னர் வீட்டிலுள்ள வர்களுக்கும் எடுத்துச் சென்றார்கள்.

கனகபை ஐயா, விதானையார், அதிபர், கடைசியில் வந்த பள்ளி அண்ணர் ஆகியோர் பலதும் பத்தும் கதைத்து விட்டு, புதிர்ச்சோறு சாப்பிட்டுப் பசியாறி, போடியார் கொடுத்த புது அரிசி, சூட்டிறைச்சி, எருமைத் தயிர் போன்றவைகளைச் சுமக்க முடியாது, போடியாரிடம் விடை பெற்றனர். மாதம்மையும் "வாய்.வாய்.." சொல்ல மறக்கவில்லை.

(கதை மாந்தர்களின் பெயர்கள் கற்பனையே..)




**நூல்** :- கூடுகள் சிதைந்தபோது


**ஆசிரியர்** :- அகில்

**வெளியீடு** :- வம்சி புக்ஸ்
19, டி.எம்.சாரோன், திருவண்ணாமலை

**விலை** :- ரூபாய் 120.00

இத் தொகுதியில் பதினான்கு சிறுகதைகள் இருக்கின்றன. அவற்றில் வலி அம்மா எங்கே போகிறாய்?, ரேடியோப் பெட்டி, பெரிய கல்வீடு, இது இவர்களின் காலம் என்பன புதிய களத்தை அறிமுகப்படுத்தும் அற்புதமான சிறுகதைகளாக இருக்கின்றன. ஏனைய சிறுகதைகளும் சிறப்பானவையே. ஈழத்தின் புனைகதைத் துறைக்கு நம்பிக்கை தரும் வகையில் அகில் உள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

---




**நூல்** :- குடையும், அடை மழையும்

**ஆசிரியர்** :- கிண்ணியா ஏ.எம்.எம். அலி

**வெளியீடு** :- ஹாஜரா வெளியீட்டகம், கிண்ணியா.

**விலை** :- ரூபாய் 250.00

இந்நூலாசிரியர் எழுபதுகளிலிருந்து மரபுக் கவிதை வழற்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளார். கவிஞர் ஏ.எம்.எம். அலி தினசரிப் பத்திரிகை முதல் ஏடுகள் வரை பிரசுரமான கவிதைகளை கோத்து, மாலையாக்கி தமிழ் அன்னைக்குச் சூட்டியுள்ளார். சில நூல்கள் படிக்கத் தக்கவை. சில நூல்கள் வாசிக்கத் தக்கவை. கவிஞர் அலியின் கவிதைகள் அழியாச் சொத்து. அதனால் எவருக்கும் பிடிக்கக் கூடியவை. எவரும் வாசித்து இன்புறக் கூடியவை. அத்தோடு இவரின் கவிதைகள் தமிழுக்கு அலங்காரம் செய்ய வந்தவை. அது என்றும் நிலைத்து நின்று அவர் பெயரை நிலைநாட்ட வேண்டுமெனத் “தென்றல்” மனதார வாழ்த்துகிறது.



-கவிஞர்
செ.குணரத்தினம், அமிர்தகழி-

# குழந்தை வடிவில் இறைவன்!

குழந்தை வடிவில் இறைவன் எனது
குடிசையில் வாழ்கிறான் – அவன்
மழலை மொழியில் மயங்கித் தினம் நான்
மகிழ்ச்சியில் வாழ்கிறேன்!

கட்டித் தயிர் போல் தொட்டிலில் ஆடி
கனிவாய்ச் சிரிக்கின்றான் –நான்
பட்டினி பசியை மறந்தவன் விழியை
பார்த்துச் சிரிக்கின்றேன்!

நாவற் பழவிழிப் பார்வையினாலவன்
நம்பிக்கை தருகின்றான் –என்
வாழ்வில் ஒளிதர வந்த நிலவென
பாடிக் களிக்கின்றேன்..!!!



# வரலாற்றின் திரிபுகளில் சிக்கியுள்ள சிங்ககிரியான "சிகிரியா"

-கலாபூஷணம் பூ.ம.செல்லத்துரை -

இலங்கையின் பூர்வீகக் குடிகள் நாகர், இயக்கர் என்பதில் இரண்டாம் பேச்சுக்கு இடமில்லை. நாகர், இயக்கர், திராவிடர் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இவற்றை முழுமையாக மகாவம்சம், சூளவம்சம் என்ற பௌத்த நூல்கள் ஏற்றிருக்கின்றமை இலங்கை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. பல திரிபுகளும், ஐதீகங்களும், இட்டுக் கட்டிய கதைகளும் உள்வாங்கியதே மகாவம்சம் என்று ஆய்வறிஞர்கள் பலர் கூறியும், ஏற்காது - கேட்காது, மாற்றாது, உண்மைகளை உணர முற்படாது, மகாவம்சத்தை முற்று - முழுதாக விளங்கிய சிங்கள சமூகம் இலங்கை பூர்வீகக் குடிகள் நாகர், இயக்கர் என்று மகாவம்சம் கூறுவதையும் நம்பித்தானாக வேண்டும்.

அவர்கள் ஏற்றாலும் - ஏற்காமல் விட்டாலும் அதுவே யதார்த்தமும், உண்மையுமாகும். இந்த உண்மையை இலங்கையின் முதல் தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் செ.பரணவிதான ஏற்றுக் கொண்டார். இக்கருத்தை மென்டிஸ், பீரிஸ் போன்ற வரலாற்று ஆய்வாளர்களும் -கு.ற.கணரத்தின,சனக பண்டாரநாயக்க, தெரணிகல போன்ற புத்திஜீவிகளும் ஏற்றுள்ளார்கள்.

பலராலும் அங்கீகரிக்கப்பட்ட உண்மையின் அடிப்படையில் இலங்கையின் பல பாகங்களிலும் பரந்து, விரிந்து வாழ்ந்தவர்கள் திராவிடர். மலையையும் - மலையை அண்டி வாழ்ந்தவர்கள் நாகர்கள். சிகிரியா

என்று இன்று அழைக்கப்படும் அன்றைய சிங்ககிரியை அடுத்துள்ள பழம்பெரும் இராசதானி பொலநறுவையாகும். இந்நகரின் ஆரம்பப் பெயர் புலத்திநகர். இது புலத்தி என்ற முனிவரால் கருவாக்கி, உருவாக்கப்பட்ட நகராகும். இசை வேந்தன் இராவணனின் தந்தையின் தந்தை புலத்தி நகரையும், அதனை அண்டிய பாகத்தையும் ஆண்டான் என்பது உண்மை.

இன்று பொலநறுவையில் 14 ற்கு மேற்பட்ட சைவக் கோவில்கள் உண்டு. பொலநறுவை என்ற பெயரும் கூடத் தமிழ்ப் பெயராகும். பொலநறுவையை அண்டிய பாகம் அனைத்தும் தமிழர் ஆளுகைக் குட்பட்டிருந்த பகுதி. அந்த வகையில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து சிகிரியா தமிழ் முனிவர்களின் இருப்பிடமாகும். அன்று இலங்கை வரலாற்றில் கட்டிடம், சிற்பம், சித்திரம் போன்ற அருங்கலைகளைப் பேணி வளர்த்த இனமொன்று இருந்தது என்பதை வரலாறு ஆணித்தரமாக அடையாளம் இட்டுள்ளது. அவர்கள் ஓவிய நாகர்கள். இவர்கள் மாந்தையிலும், மாந்தை – மாதோட்டப் பகுதியிலும் வாழ்ந்தார்கள்.

மாந்தையை இவ்வினத்தவர்களே ஆண்டார்கள். இவர்கள் இலங்கையைப் படைத்த விஸ்வகர்மாவின் வாரிசுகளாவர். இந்த இனத்தைச் சேர்ந்தவரே புலத்திய முனிவருமாவார். இவரே புலத்திய நகரைக் கருவாக்கி உருவாக்கியவர். மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த டம்புள்ள குகைக் கோவிலை அமைத்தவர் விஸ்வகர்மா என மகாவம்சம் கூறுகிறது. டம்புள்ளையை அண்டியே சிகிரியா அமைந்துள்ளது.

சிகிரியாவின் ஆக்கத்தையும், வரலாற்றையும் சில பௌத்த வரலாற்றாசிரியர்கள் காசியப்பனோடு இணைத்துப் - பிணைத்து முடிச்சுப் போடுகிறார்கள். காசியப்பன் தாதுசேனனின் வைப்பாட்டியின் மகன். பட்டத்து ராணியின் மகனல்ல. அவன் தன் தந்தையைக் கொலை செய்தே அரசுரிமையைப் பெற்றுக் கொண்டவன். அவன் தன் தந்தையை ஏன் கொலை செய்தான் எனத் தெரிந்து கொண்டால், காசியப்பனால் இவ்வாறான ஒரு சித்திரக் குன்றை உருவாக்கியிருக்க முடியாது - என்ற உண்மை வெளிவரும். காசியப்பன் தந்தையை உயிரோடு சித்திரவதை செய்து கொலை செய்ததே பொக்கிஷம் கேட்டுத்தான். எனவே காசியப்பன் ஆட்சியை அடாத முறையில் கவர்ந்தபோது, பொருளாதாரம் இல்லாத நிலையையும், தாதுசேனனின் பட்டத்திற்குரிய மகனான மோகலாயனின்

முழு எதிர்ப்பையும் சம்பாதித்திருந்தான்.

இவன் பாதுகாப்பிற்காக இம்மலைப் பிரதேசத்தில் வாழ்ந்தவனே ஒழிய, சிகிரியா சித்திர மலைக் குன்றைக் கட்டியவனல்ல. இவன் காலத்தில் சிகிரியாவுக்கு "சிங்ககிரி" என்ற பெயரே இருந்தது. சிகிரியா என்ற பெயர் சிங்ககிரியின் வரலாற்றைச் சிதைக்க பயன்படுத்தப்பட்ட பெயரேயாகும்.

அக்காலத்தில் கதிரமலையை ஆண்டவன் பத்மாசூரனாவான். அவன் தம்பி சிங்கமாசூரன் சிங்ககிரிப் பகுதியில் வாழ்ந்தான். இவர்கள் தாய்த் தெய்வமான காளியை வழிபட்டார்கள். காளியின் வாகனம் சிங்கமாகையாலும், இவர்களது ஆட்சிக் கொடி சிங்கமாக இருந்ததாலும் இவனுக்குச் சிங்கமாசூரன் எனப் பெயர் சூட்டப்பட்டது.

அவனும் – அவன் தமையன் பத்மாசூரனும் மாந்தை இராச குடும்பத்தோடு திருமண உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள். இவர்கள் ஓவிய நாகர்களின் உறவினர்களாவர். சிங்கமாசூரன் ஓவிய நாகர்களின் உதவியோடு இச்சித்திரக் குன்றை அமைத்தான். தங்கள் குலக் கொடியின் அடிப்படையில் சிங்கமுக அமைப்பில் இக்குன்று அமைக்கப்பட்டது. அதனால் அதன் பெயரிலுள்ள சிங்கத்தையும், மலைக்குரிய பெயர்களில் ஒன்றான கிரியை இணைத்து இம்மலைக்குச் "சிங்ககிரி" எனப் பெயர் சூட்டப்பட்டது. இப் பெரில் இக்குன்றை அமைத்த சிங்கமாசூரனின் பெயரும் இரண்டறக் கலந்திருக்கிறது.

சில காலங்களின் பின் சிங்ககிரியின் வரலாற்றைத் திரிக்கவும், மறைக்கவும் முயன்றவர்கள் திட்டமிட்டுச் சிங்ககிரியைச் சிகிரியாவாக் கினார்கள். ஏற்கனவே நான் காட்டியபடி புலத்திய நகரான பொலநறுவையை புலத்திய முனிவரின் சந்ததி ஆண்டது. காசியப்பன், தாதுசேனன் அனுராதபுரத்தை ஆண்டார்கள். இப்பகுதி திருமலை, மட்டக்களப்பை அண்டிய பகுதி . தமிழரின் ஆதிக்கம் நிறைந்த பகுதி . அப்படியிருக்க, காசியப்பனால் சிகிரியாப் பகுதியில் புகுந்து, மலையைச் செப்பனிட்டு, ஒரு சித்திரக் குன்றையும், மாளிகையையும் அமைக்க பணபலம், ஆட்பலம், பாதுகாப்புப் பலம் கிடையவே கிடையாது. இருந்தும் காசியப்பன் ஒரு பௌத்தன். அவன் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே பௌத்தர்களின் பல புனித சின்னங்கள் அனுராதபுரத்தில் வைக்கப்பட்டிருந்தது.

பௌத்தர்களிடையே ஒரு பாரம்பரிய வழக்கம் உண்டு. பௌத்தர்கள் யாராயினும், புதுக் கட்டிடங்களை, மாளிகைகளைக் கட்ட முற்படும் முன், ஒரு கட்டிடமோ அல்லது ஒரு பந்தலோ போட்டு புத்தரின் புனித சின்னமான பல்லை வைத்து வழிபட்ட பின்பே தாங்கள் தொடங்கிய கட்டிடத்தினைக் கட்ட முற்படுவார்கள். ஆனால் சிகிரியாவில் **"இப்படியான எந்த ஏற்பாடும் நடந்ததற்கான தடயங்கள் எதுவுமில்லை"** என பௌத்த அறிஞரும், முன்னாள் தொல்பொருள் திணைக்கள ஆணையாளருமான ராஜா டி.சில்வா கூறுவதோடு மட்டும் நில்லாது, திட்டவட்டமாக சிகிரியா காசியப்பனால் கட்டப்படவில்லை என மறுத்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து இன்னும் சில பௌத்த ஆய்வாளர்கள் சிகிரியா பௌத்த சிங்களவரால் கட்டப்படவில்லை என்பதை உறுதி செய்துள்ளார்கள். சிகிரியா இராவணனின் மாளிகைகளில் ஒன்றாக இருக்கலாம் – எனக் கூறும் கலாநிதி மிரண்டா ஒபயசேகரா இதற்கான காரணங்களை விளக்கி , ஒரு கட்டுரையை வடித்துள்ளார்.

அவர் கூறும் கருத்துப்படி பார்த்தால் இராவணன் சிறந்த இசை வேதை. நுண்கலையில் ஆர்வம் மிக்க கலைஞன். அழகை இரசிக்கும் ரசிகன். பொருளாதாரம் மிக்கவன். கலைகளைப் படைக்கும் அற்புத திறமைமிக்கவன்– மயன் அவன் மாமன். கல்லிலே கலைவண்ணம் கண்ட கலைஞர் சமூகத்தவன். இவ்வாறான ஒன்றைப் படைப்பதற்கு வேண்டிய கலை ஞானம், கற்பனை வளம், பொருட்பலம், ஆட்பலம், அறிவு, தூய்மை மிக்கவன். இலங்கையை ஆண்ட முதல் மன்னன். இராவணனுக்கு பத்து மாளிகை இருந்த வரலாறு உண்டு.

இராவணனின் தம்பி கும்பகர்ணன் வன்னியில் குருமலையில் வாழ்ந்தான். இவன் தேரில் சிங்கக்கொடி பறந்த வரலாற்றை இராமாயணம் கூறுகிறது. இராவணனின் உறவினனே சிங்கமகாசூரனாவான். சிகிரியா அரச மாளிகையல்ல. அது முழுக்க முழுக்க சமய சம்பந்தமான இடமாகும். அச்சமயம் இந்து சமயமாகவோ, வேறு சமயமாகவோ இருக்கலாம் – என பௌத்த சிங்களக் கலாநிதியான இரத்தினசூரியா கூறுகிறார்.

இந்த மூன்று பௌத்தச் சிங்களக் கலாநிதிகளும் சிகிரியா எந்தப் பௌத்தச் சிங்களவராலும் கட்டப்படவில்லை – என்பதை மனப்பூர்வமாக ஏற்றிருக்கிறார்கள். வேறு எந்தச் சமயத்தவர்களும் சிகிரியா கருவாகி ,

உருவாகிய போது, இலங்கையில் இருந்ததில்லை. எனவே தமிழரின் உழைப்புக் கைவண்ணம் சிகிரியாவாகும்.

இன்று சிகிரியா, சிவனொளிபாதமலை, கதிர்காமம் ஆகியன சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் இருப்பதால் அவர்கள் உரிமை கொண்டாடலாம். அதன் மூலகர்த்தாக்கள் தமிழர் என்பதை மறைக்கவும், மறுக்கவும் கூடாது. நிறைந்த தமிழர் வாழும் பகுதியான வடபகுதியிலுள்ள நாகவிகாரை நாகர்களால் உருவாக்கப்பட்டது. சிங்களவரால் கட்டப்பட்டதல்ல. இருந்தும் பௌத்த மதத்தின் உரிமையை மதித்து, தமிழர்கள் சிங்களவர்களுக்கே வழங்கியுள்ளார்கள். ஆனால் இந்து சமயத்தின் உரிமையான இடங்களைப் பௌத்தர்கள் அபகரித்துக் கொண்டு வரலாற்றையும் திரிவுபடுத்துகின்றனர்.

இது இவ்வாறிருக்க, இன்னும் ஒரு புதிய கருத்தை சில ஆய்வாளர்கள் முன்வைக்கிறார்கள். அதாவது அக்காலத்தில் புஷ்பக விமானம், வானவூர்தி ஆகிய இரண்டு விமானங்களை இலங்கையின் முதல் மன்னர்களான குபேரனும், இராவணனுமே வைத்திருந்தனர். இவர்கள் இருவரும் சகோதரர்கள். அக்காலத்தில் விமானங்களைத் தரிக்கக் கூடிய வசதி வாய்ப்பில்லாததால், மலையுச்சியில் குளத்தை ஏற்படுத்தி அதில் இறக்கினார்கள். அவ்வாறான தரை சிகிரியா, கைலயங்கிரி , சிவனொளிபாதமலை போன்ற மலைகளில் செய்யப்பட்டிருந்தது.

எனவே எந்த வகையில் பார்த்தாலும், சிகிரியா தமிழர்களால் உருவாக்கப்பட்ட சித்திர சிங்கநகராகும். இன்று உலக கலாசார அமைப்பால் பாதுகாக்கப்படும் உன்னத கலைச்சிகரம் தமிழர்களின் உழைப்பின் சின்னம் எனக் கூறினால் அது மிகையாகாது.

பாடசாலை நூல்களில் சிகிரியா காசியப்பனால் கட்டப்பட்டது என்ற தப்பான வரலாற்றுத் தகவல்களே புகுத்தப்பட்டுள்ளன. இது பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைப் பாய்ச்சும் செயலாகும். மூன்று சிங்களக் கலாநிதிகள் பௌத்தர்களால் சிகிரியா கட்டப்படவில்லை – என்று உறுதியாகக் கூறிய பின்பும் இத்தவறு தொடர்வது நியாயமில்லை.

**"தென்றலின்" தொடர் வருகைக்கு உதவுங்கள்.**

(ஆ-ர்)



-கவிதை-

-உடப்பூர் வீரசொக்கன்-

# சமாதான தீபம் ஏற்றிடுவோம்..

வரிசையாக தீபங்கள் ஏற்றிட
வந்ததம்மா மகிழ்வான தீபாவளி
உரிமை கொண்டாட எம்மவர்க்கு
உயர்ந்த திருநாளம்மா!

ஒளியேற்றும் மகிழ்வான நாளன்று
ஒற்றுமை உணர்வு வேண்டுமம்மா
பழிவாங்கும் செயல் இன்றே ஒழிந்திட
பாங்கான திருநாளொன்று வந்ததம்மா!

அமைதி பிறந்து ஆனந்தம் தந்திட்ட
அணையாத தீபஒளி பிறந்ததம்மா
கொடுமை அகன்று கோட்டம் அகல
கொண்டாடுவோம் தீப நாளம்மா!

நாசம் புரிந்த நரகாசூரனை வதைத்த
நாளென்று சொல்லி மகிழ்ந்திடம்மா
தேசம் எங்கும் சிறப்புடன் ஒளியேற்றும்
தெய்வீகத் திருநாளம்மா!

சாந்தி சமாதானம் பிறந்திட
அமர தீபத்தை ஏற்றிடுவோம்
ஓங்கி ஒளி தரும் ஒற்றுமை தீபத்தை
ஒன்றாக ஏற்றி மகிழ்ந்திடுவோம்...!!!




**ஊ**ழிக் காலப் பிரளயம் போலவொரு அல்லோல - கல்லோலம். ஏணையில் கிடந்த குழந்தையை அள்ளியெடுத்துக் கொண்டு அக்கா ஓட, அவள் பின்னால் ஆச்சி ஓட, அதைப் பாரத்து என்னையும் இழுத்துக் கொண்டு அம்மா ஓட. வீடு வெறிச்சோடி, வீதியில் புழுதி கிளம்புகிறது. எல்லோர் இதயத்திலும் மரணபயம்.

**"உதென்ன கிலிசம்பறையப்பா, உந்த வயசு போன காலத்தில."**

சீறிவிழும் செல்லோசை காது பிளக்க, ஆச்சி அவஸ்தைப் படுவதைப் பார்க்க எனக்குச் சகிக்க முடியவில்லை.

**"தட்டாதெரு சந்தி முதல் நாயன்மார்கட்டு வரை கனசனம் இடம் பெயர்ந்திருக் கினமாம். ஆயிரமாயிரம் குடும்பங்களும் படுற அவஸ்தையை சொல்லிலை விளக்கேலாது"**

**"கெதியிலை வாங்கோப்பா எங்கேனும் ஓடித் தப்புவோம்"**

பக்கத்து வீட்டுக் குடும்பமும் ஓடிக் கொண்டிருக்கிறது. இலக்கோ தெரியாமல், எனக்கு இந்த ஓட்டம் ஆரம்பித்து கனகாலமாகி விட்டது. தொண்ணூறிலை கல்முனையில ஆரம்பிச்ச ஓட்டம். இப்ப வந்து மானிப்பாயில நிக்குது. இனிக் கொக்குவில். இனி எங்கெங்கோ.?

ஐஞ்சு வருஷத்துக்கு முன்னம் ஷெல் விழுந்து செத்தால் பெரிய அதிசயம். இப்போது வலு சிம்பிள். இன்னும் கொஞ்ச நேரத்தில என்ர மண்டையில விழுந்தாலும், ஆரும் ஆச்சரியப்பட மாட்டினம். இழவு வீடு செய்ய மாட்டினம். அப்படியொரு சாதாரணம்.

தொண்ணூறாம் ஆண்டு நான் கல்முனையில இருக்கேக்க, உடையார் றோட்டிலையொரு ஷெல் விழுந்து தாய், பிள்ளையள் செத்துப் போனதை நினைச்சு எத்தினை நாள் சாப்பிடாமல் கண்ணீர் விட்டிருப்பன். இப்போது மனம் எவ்வளவு இயல்பாகி விட்டது. ஏ.எல். சோதினைக்குப் படித்துக் கொண்டிருந்த சிவாவும், கோபியும் என் முன்னால் ஓடிக் கொண்டிருக் கிறார்கள்.

“என்ன சிவா மூட்டையொண்டு உடுப்புகளோ.?”

“மண்ணாங்கட்டி மனுஷன் உயிரைக் கையிலே பிடிச்சுக் கொண்டு ஓடேக்க அது தானொரு குறைச்சல்”

“பின்ன என்னத்தையடா சுமந்து கொண்டு ஓடுறீங்க..”

“கொஞ்சம் புத்தகங்களக்கா, உயிர் தப்பிப் பிழைச்சால் சோதின எழுத வேணுமெல்லோ,அதுதான் மினக்கெட்ட நாங்கள்!”

மறுவார்த்தை பேசவரவில்லை. துக்கம் தொண்டையை நெருக்கிற்று சே.. இப்படியொரு வாழ்க்கையா? ஏனிந்தச் சாபக்கேடு? நிம்மதியாய் இருந்து படிச்சுச் சோதின எழுத முடியாமல் நிறையப்பிள்ளைகள் ஓடிக் கொண்டிருக் கிறார்கள். மீண்டும் செவி பிளக்கும் செல்லோசை. எதிர்த் தெருவில் மரண ஓலம். கால்கள் தள்ளாடுகின்றன.

மனபலமும், உடற்பலமும் இழக்கப்பட்டு விட்டன. சங்கிலித் தொடராய் மனிதக் கால்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.. மீண்டும் என் மனம் சமநிலை இழக்கிறது. சிவாவும், கோபியும் என்னை உற்சாகப் படுத்துகிறார்கள். அவர்களின் விழிகளில் தான் எத்தனை கனவுகள்? இதயத்தில் எத்தனை எதிர்பார்ப்புகள்? பன்னிரெண்டு வருஷங்கள் படித்ததற்கான எதிர்பார்ப்புக்கள்? எத்தனை அறுவடைக் கனவுகள்? என் மனம் சட்டெனக் கிழக்கின் நிகழ்வுகளுக்குத் தாவியது. நினைவுப் புரவி புழுதி கிளப்பி வேதனையை விஸ்தரித்தது.

ஏ.எல். பரீட்சை எழுத இருந்த இளங்கோவும், நிதர்ஷனும், தீபனும், யோகராசாவும் இன்னும், இன்னும் அனேகர் "மிஸ்ஸிங்" ஆனார்கள். அவர்களுக்குள் எத்தனை கனவுகள்? எதிர்பார்ப்புக்கள்? இருந்திருக்கும். அத்தனையும் கருகிப் போய், மேற்கொண்டு என்னால் சிந்திக்க முடியவில்லை.

சித்தன்கேணி ராமநாதன் குடும்பமும் ஓடிக் கொண்டிருக்கிறது. தோளிலும், கையிலும், இடுப்பிலும், வயிற்றிலும் குழந்தைகளோடு ஓடுகிறார்கள். மீண்டும் இடியோசை.

ஒரு மரநிழலில் ஒதுங்குகிறோம்.. காதுகளைப் பொத்திக் கொண்டு, கடவுளை நினைத்துக் கொண்டு நான், சிவா, கோபி, இராமநாதன் குடும்பம். சீறி விழும் சத்தம்.. உயிர் துடிக்கிறது. உடல் நடுங்குகிறது 'ஆ..ஆ' ஆ.. கண்களை விழித்த போது, என்னருகே இருந்த சிவா சிதிலமாகி உருத் தெரியாமல்' இறைவா.!
என் உடையெங்கும் இரத்தக் கறை.

ஒரு கணப்பொழுதில் வாழ்வு ஸ்தம்பித்து விட்டது. எனக்கு அழுகை வந்தது.. இதயம் வெடித்து விடும்போல ஓர் ஓலம் அகத்திலிருந்து குபுக்கென வெளியேறியது. கோபி அழவில்லை. மௌனமாகச் சம்மணமிட்டு அமர்ந்திருக்கிறான். அருகில் சிவா சுமந்து வந்த புத்தக மூட்டை அனாதரவாய்க் கிடக்கிறது. இராமநாதன் குடும்பம் ஓடுகிறது. நான் இனி ஓடப் போவதில்லை. என் கால்களுக்கு ஓடுவதற்குச் சக்தியில்லை. நேரம் ஓடிக் கொண்டிருக்கிறது. மெல்ல மெல்லப் பதட்டம் தணிகிறது. மண்ணைத் தட்டிக் கொண்டு எழுந்து, கோபியையும் பிடித்துக் கொண்டு அகதிகளாய்.. சொந்த மண்ணில் நடந்து கொண்டிருக்கிறோம்.

(நன்றி – வலி சுமந்த மானுடம்)

---

எழுத்தாளர்களே! தங்களால் வெளியிடப்படும் நூல்கள், இறுவட்டுக்கள் புதிய வரவுகளில் இடம்பெற வேண்டுமானால், உங்களால் வெளியிடப்பட்ட நூல்கள், இறுவட்டுக்களைத் "தென்றலுக்கு" அனுப்பி வையுங்கள்.

(ஆ-ர்)

---

# முகப்பில்...

2017 தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காகத் "தென்றல்" சஞ்சிகை நடாத்திய முன்னோடிப் போட்டிப் பரீட்சைகளின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஆரையம்பதி அபிராமி ஜுவல்ஸ் தொழிலதிபர் புரவலர் க.பாக்கியராஜா மூன்றாம் பரீட்சையில் தங்கபதக்கம் பெற்ற மட்/மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய மாணவி கிருபாகரன் தியாகரி, இரண்டாம் - நான்காம் பரீட்சைகளில் தங்கப் பதக்கம் பெற்ற மட்/மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மாணவன் விஜயகுமார் விதுர்ஷன், முதலாவது பரீட்சையில் தங்கப் பதக்கம் பெற்ற மட்/மட்/ கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய மாணவன் செந்தில்நாதன் பிரவீந்த் ஆகியோருக்குப் பதக்கம் அணிவித்துப், பாராட்டுச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம்.

# வாசகர் நெஞ்சம்

என் அபிமானத் "தென்றல் சஞ்சிகை" ஒரு வருட காலமாக வெளிவராதது கவலையைத் தந்தது. எனினும் ஆசிரியரின் சுகவீனத்துக்கு மத்தியிலும் வீறு கொண்டெழுந்து, எட்டுத் திக்கும் மணம் பரப்பும் "தென்றலை" வாழ்த்த ஆயிரம் ஜென்மம் போதாதையா? நீ எத்தடை வரினும், அத்தடைகளைத் தூசு போன்று எதிர்கொண்டு இலக்கிய உலகுக்கு மங்காமல் ஒளி பரப்ப வேண்டுமென்பதே எனது பேரவா!


என்றும் உன் வாசகி

கி. சுதந்தினி, பசறை.

# 5 கேள்வி பதில்

**இல: -04-**

1. சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படுவது எது?
2. நத்தை முட்டையின் நிறம் யாது?
3. உப்புத் தூள் விரைவாகக் கரைவது?
4. மண்ணை வளமாக்க உதவுவது?
5. அபயவாவியைக் கட்டுவித்த அரசன் யார்?



**விதிகள்:**

01. இப் போட்டியில் சகலரும் பங்கு கொள்ளலாம்.

02. இப்போட்டியில் பங்குபற்றுவோர் கீழ் உள்ள கூப்பனில் விடைகளை எழுதி, நிரப்பி ஆவணி 15 ஆம் திகதிக்கு முன்னர் **"5 கேள்வி – 5 பதில்", "தென்றல்"** 44/1,பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

03. கூப்பன் இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. வெற்றியாளர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

05. வெற்றிபெறுவோருக்கு முதல் பரிசாக 500/= வும், இரண்டாம் பரிசாக 300/=வும், மூன்றாம் பரிசாக 100/=வும் அனுப்பி வைக்கப்படும்.

## 5 கேள்வி - பதில்
## இல- 04 விடைகள்

*1.*
*2.*
*3.*
*4.*
*5.*

பெயர் :- ..........................................................................

முகவரி :- ..........................................................................

..........................................................................

# 5 கேள்வி பதில்

## இல: 03 விடைகள்

1. C.W.W. கன்னங்கரா
2. ஆலமரம்
3. பேடன் பவல்
4. கண்டி.
5. மகுடி.

## பரிசில் பெறுவோர்

### முதலாம் இடம்

டி.டிவசனன்
புளியடி வீதி,
புதுக்குடியிருப்பு - 04.

### இரண்டாம் இடம்

வ.கீதா
கூமாங்குளம்
வவுனியா.

### மூன்றாம் இடம்

டி.நிசாந்தன்
ஈச்சந்தீவு - கன்னன்குடா
ப.நோ.கூ. சங்கம்
வவுணதீவு.



## பாராட்டுப் பெறுவோர்

1. யோ.ஜனகன் - நாவற்காடு.
2. திருமதி கீதாசினி தியாகரன்- வவுணதீவு.
3. அ.செல்வராஜி - வவுணதீவு.
4. வி.சுருதி - திருகோணமலை.
5. வ.பிரபாகரன் - அப்புத்தளை.

# இது என்ன உலகங்கா!!!

– தர்மா –

நேரழ ரிப்போட்

மட்டக்களப்பு நகருக்கு மிக அண்மையிலுள்ள ஊரில் கடை உரிமையாளராகவும், ஆட்டோ ஓட்டுநராகவும் உள்ள மோகனமான வரிடம் ஏமாற்றுக்காரர்கள் அண்மையில் தமது சொல்வரிசையைக் காட்டிப் பணத்தை கறந்து சென்றுள்ள சம்பவமொன்று **"தென்றலின்"** இது என்ன உலகங்காவுக்குக் கிடைத்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது :- குறிப்பிட்ட தினத்தில் ஏமாற்றுப் பேர்வழிகள் தாம் **"டயலொக்"** நிறுவனத்திலிருந்து கதைப்பதாகவும், தங்களுக்குப் பத்து லெட்சம் ரூபாய் பணம் அதிஷ்டச் சீட்டிழுப்பின் மூலம் கிடைத்துள்ளதாகவும், அதனைப் பெறத் தாங்கள் எங்களுடன் தொலைபேசித் தொடர்பைத் துண்டிக்காமல் இருக்குமாறும், இதனை யாரிடமும் கூறக் கூடாதெனவும், இன்னும் 45 நிமிடங்களில் பணம் போடாவிட்டால், அப்பணம் ராணுவத்துக்கு வழங்கப்பட்டு விடுமெனவும், உடனடியாக தேசிய சேமிப்பு வங்கிக்குச் சென்று, ரூபாய் 5000 வீதம் ஐந்து பணச்சிட்டை களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென அறிவுறுத் தியுள்ளனர். அவர் அதன்படி ரூபாய் 25000 ஐ குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துக்கு வைப்புச் செய்துள்ளார்.

அதன் பின்னர் நீங்கள் போட்ட பணம் போதாது, மீண்டும் ரூபாய் 50000 போட வேண்டும் என்றனராம். அப்போது அவரிடம் அத்தொகை பணமில்லாததால் அவர் பெரிய கடை உரிமையாளரிடம் பணம் கேட்டுள்ளார். அதற்கு அக் கடை முதலாளி எதற்குப் பணம் எனக் கேட்க மோகனமானவர் விடயத்தைக் கூறினாராம். அதற்கு அவர் உடனடியாக டயலொக் நிறுவன முகாமையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவ்வாறு ஒன்றும் அவருக்குக் கிடைக்கவில்லை எனக் கூறினாராம். இதனால் ரூபாய் 50000 தப்பியது, என்றும் அவ்வாறு தான் செலுத்தியிருந்தால் வீடு - வளவு, ஆட்டோ எல்லாம் விற்று நடுத்தெருவில் நின்றிருக்க வேண்டுமென மோகனமானவர் கூறினார். **"அவரது பேராசையால் பெரு நட்டம்"** ஏற்பட்டுள்ளதை எண்ணி - எண்ணிக் கலங்கு கிறாராம் அந்த மோகனமானவர்.

-வல்வை. ந.அனந்தராஜ்-

# திரை இசைப்பாடல்களில் நாட்டார் பாடல்களின் தாக்கம்!



தமிழ் சினிமா பேசாப் படமாக ஆரம்பித்துப் பின்னர் பேசும் திரைப் படமாக வழற்சியடைந்த காலங்களில் இருந்து இன்று வரை ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்கள் பல்வேறு கவிஞர்களால் எழுதப்பட்டு, இசையமைக் கப்பட்டுள்ளன.

இப்பாடல்களுக்கான கருப்பொருள் பின்வரும் மூலங்களில் இருந்து தெரிவு செய்திருப்பதை அப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

1. மக்களின் நாளாந்த வாழ்க்கை முறைகள்.
2. சங்க இலக்கியப் பாடல்கள்.
3. பிறமொழிகளில் இருந்து பெறப்பட்ட தழுவல்கள்.
4. பாரதி, பாரதிதாசன் போன்ற 20 ஆம் நூற்றாண்டுக் கவிஞர்களின் பாடல்கள்.
5. தமிழ் மக்களிடையே காலங்காலமாக வழக்கில் இருந்து வந்த நாட்டார் பாடல்கள்.

இவற்றுள் நாட்டார் பாடல்கள்- எவருக்கும் சொந்தமானவையாகவோ அல்லது ஒரு பிரதேசத்திற்கு மட்டும் உரியவையாகவோ இல்லாத காரணத்தினால் எவரது அனுமதியுமின்றியே கவிஞர்கள் தமது பாடலின் கருப்பொருளாக எடுத்து மாற்றியோ அல்லது முழுமையாகவோ தமது பாடல்களை ஆக்கி வருகின்றனர்.

அந்த வகையில் பல நாட்டார் பாடல்களில் – திரைப்படங்களில் இடம் பெற்றிருக்கின்ற சில பாடல்கள் உதாரணத்திற்காகத் தரப்படுகிறது.

1. "தஞ்சாவூரு மண்ணெடுத்து
தாழியொன்று செய்யச் சொன்னேன்
தாழிருக்கும் மட்டத்திலே நான்
தங்கியிருப்பேன் திட்டம் போல" - படம் :- பொற்காலம்

2. "காடு வௌஞ்சிருக்கு மச்சான்" - நமக்கு
கையும் காலும் தானே மிச்சம்" - படம் :- நாடோடி மன்னன்

3. "ராசாத்தி ஒன்னை நினைச்சு
ராப்பகலாக் கண் விழிச்சேன்" - படம் :-வைதேகி காத்திருந்தாள்

4. "உச்சி வகிந்தெடுத்து
பிச்சைப்பூ வச்ச கிளி
பச்சை மலைப் பக்கத்திலே
மேயுதென்று சொன்னாங்க." - படம் :- ரோசாப்பூ ரவிக்கைக்காரி

5. "சந்தனத்தில் ஒரு வாசம் எடுத்து
தழுவிக் கொண்டோடுது தென்னங்காத்து
அந்தரத்திலே ரெண்டு பச்சைக் கிளிகள்
ஆலோலம் பாடுது நம்மைப் பார்த்து" -படம் :- பிராப்தம்

6. "தாழையாம் பூமுடித்து
தடம் பார்த்து நடை நடந்து
வாழையிலை போல வந்த பொன்னம்மா
என் வாசலுக்கு வாங்கி வந்த தென்னம்மா" - படம் :- பாகப் பிரிவினை

7. "அன்னக்கிளி ஒன்னைத் தேடுது
ஆறுமாசம் ஒரு வருசம்
ஆவரம்பூ மேனி வாடுதே" -படம் :- அன்னக்கிளி

8. "ஊரார் உறங்கையிலே
உற்றாரும் தூங்கையிலே
நல்ல பாம்பு வேடங் கொண்டு
நான் வருவேன் சாமத்திலே" படம் :- நாலு வேலி நிலம்

9. "மாப்பிள்ளை வந்தார் மாப்பிள்ளை வந்தார்
மாட்டு வண்டியிலே
பொண்ணு வந்தா பொண்ணு வந்தா
பெட்டி வண்டியிலே" - படம் :- இரு சகோதரிகள்

10. "காக்கா காக்கா மைகொண்டா
காடைக் குருவி தேன் கொண்டா" - படம் :- வண்ணக்கிளி

11. "பாடறியேன் படிப்பறியேன்
பள்ளிக்கூடம் நானறியேன்
ஏடறியேன் எழுத்தறியேன்
எழுத்துவகை நானறியேன்
ஏட்டிலே எழுதவில்லை
எழுதி நான் படிக்கவில்லை" - படம் :- சிந்துபைரவி

12. "மாட்டு வண்டி பூட்டிக்கிட்டு
மாப்பிள்ளையைக் கூட்டிக்கிட்டு
காட்டுவழி போற பெண்ணே கன்னியம்மா - உன்
காசு மாலை பத்திரமாப் பாத்துக்கம்மா" - படம் :- வீரபாண்டியக் கட்டப் பொம்மன்

13. "இஞ்சி இடுப்பழகி
மஞ்சள் சிவப்பழகி
கள்ளச் சிரிப்பழகி" - படம் :- தேவர்மகன்

இவ்வாறு பல்வேறு பாடல்கள் நாட்டார் இலக்கியப் பாடல்களைக் கருப் பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

சினிமாவின் தாக்கம் கிராமப்புற மக்களை மட்டுமல்லாது, இன்று படித்த - நடுத்தர மக்களையும் பெரும் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றது.

சினிமாப் படங்களில் நாட்டார் பாடல்களின் அமைப்பும், மெட்டுக்களும் தமது தனித்துவத்தை இழந்து, வேறு வகை மெட்டுக்களாக்கப்பட்டு அவையே கிராம மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. இந்நிலையில் கிராம மக்களால் பேணப்பட்டு வந்த தூய நாட்டார் கலை வடிவங்கள் சிதைவுக் குள்ளாக்கப்பட்டு மரபு வழிப்பட்ட இலக்கியங்கள் மறைந்து போகின்ற அபாயத்தை சினிமா ஏற்படுத்துவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

நாட்டார் பாடல்களைச் சினிமாப் பாடல்களிலும், இசைக் கச்சேரிகளிலும் புகுத்துவோர் அவற்றின் மூலவடிவத்தையும், அவற்றுக்கு உரித்தான இசை வடிவங்களையும் சிதைக்காது, உள்ளதை உள்ளபடி எழுதவும் - இசையமைக் கவும் முன்வர வேண்டும். அப்போது தான் எமது கிராமங்களில் காலங்கால மாகப் பேணப்பட்டு வருகின்ற மரபு வழிப்பட்ட கலை வடிவங்களைப் பேணிப் பாதுகாக்க முடியும்.

இந்நிலையில் கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்தி வரும் தென்னிந்தியச் சினிமாக்காரர்கள் சிறிதளவாவது தமிழர் பண்பாடுகளையும், பாரம்பரியக் கலை வடிவங்களையும் பேணும் வகையில் செயற்பட வேண்டும்.




அமேசன் காடுகளில் கடந்த இரண்டு வருடங்களாக நடாத்தப்பட்ட ஆய்வில், 381 புதிய உயிரினங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

மனித செயற்பாடுகளால் ஆபத்திலுள்ள பகுதிகளிலேயே புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட தாவரங்களும் விலங்குகளும் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.


1999 முதல் 2015 வரையான காலத்தில் இங்கு 2000 ற்கும் மேற்பட்ட புதிய உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட 381 உயிரினங்களில் 216 தாவரங்களும், 93 மீன்களும், 32 நில, நீர் வாழ்வனவும், 20 பாலூட்டிகளும், 19 ஊர்வனவும், ஒருபறவையும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# படமும் பதிவும்


திருமதி. கவிதா கிருபாகரன்










ஓர் இடம்
பிரதான வீதி, ஆரையம்பதி - 02.
065 3644944, 077 6508329.


பிரதான வீதி,
தொலைபேசி: 065 36


ஓர் இடம்
பிரதான வீதி, ஆரையம்பதி - 02.
தொலைபேசி: 065 3644944, 077 6506329






**த**ரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவ்களுக்காகத் **"தென்றல் சஞ்சிகை"** நடத்திய முன்னோடிப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பதக்கம் அணிவித்தலும், சான்றிதழ் வழங்கலும் **"தென்றல் சஞ்சிகை"** ஆசிரியர் க.கிருபாகரன் தலைமையில் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள **"தென்றல் சஞ்சிகை"** அலுவலகத்தில் 29.07.2017 (சனிக்கிழமை) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஆரையம்பதி அபிராமி ஜுவல்ஸ் தொழிலதிபர் புரவலர் க.பாக்கியராஜா மட்/மட்/அருணோதயம் வித்தியாலய மாணவி மோகன் மிருஸாவுக்கு வெள்ளிப் பதக்கத்தை அணிவித்து, சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதையும் மற்றும் மட்/கல்/செங்கலடி மத்திய கல்லூரி மாணவன் அற்புதராஜா விஸ்ணுஜனுக்கு வெண்கலப் பதக்கம் அணிவித்து, சான்றிதழ் வழங்கிக் கௌர விப்பதையும், **"தென்றல் சஞ்சிகை"** ஆசிரியர் பீட உறுப்பினர்களான **"வீசுதென்றல்"** ஆறுமுகம் அரசரெத்தினம், செல்வி த.செல்வராணி , கலாபூஷணம் முருகேசி தம்பிப்பிள்ளை, திருமதி கவிதா கிருபாகரன் ஆகியோர் பரீட்சைகளில் சித்திபெற்ற மட்/மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மாணவன் டிஸ்க்கரன் டிவுசனன், மட்/மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலய மாணவி கஜேந்திரன் யுர்த்திகா, மட்/மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர (தேசிய) பாடசாலை மாணவி பிரியதர்ஷன் ஸ்ருதி, மட்/மட்/கல்லடி ஸ்ரீ சக்தி வித்தியாலய மாணவி இராசசிங்கம் ஷஹானா, மட்/மட்/கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலய மாணவி ரவீந்திரராஜா கேஷங்கி, மட்/மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மாணவர்களான சசிகுமார் ஸஜானா, மகேஸ்வரன் டேனுஜா, அருளானந்தா

துசாயினி , மோகனச்சந்திரன் கஜதீசன், கலாநிதி துர்ஜாயினி, மட்/மட்/கல்லடி - உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலை மாணவர்களான கமலஹாசன் டக்சன், துளசிராஜன் லுக்ஷாந்த், பாலச்சந்திரன் றனுஷன், மட்/ம.மே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலய மாணவன் ர்குபரன் டினேஸ்வரன், மட்/மட்/கல்லடி ஸ்ரீ சக்தி வித்தியாலய மாணவன் தயாநிதி தர்ணிறாஜ், மட்/மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவி சகாயபாஸ்கரன் ஆன்மேரி ஏஞ்சலீனா ஆகியோருக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். பரீட்சைகளில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு அணிவிக்கப்பட்ட தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களுக்கான அனுசரணையினை ஆரையம்பதி அபிராமி ஜுவல்ஸ் தொழிலதிபர் புரவலர் க.பாக்கியராஜாவும், பாராட்டுச் சான்றிதழுக்கான அனுசரணையினை மட்டக்களப்பு லக்ஷனா கொம்பியூட்டர் றப்பர் சீல் நிறுவனத் தொழிலதிபர் புரவலர் த.மதியழகனும் வழங்கியிருந்தனர்.



மட்/மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை பரிசளிப்பு விழா 19.09.2017 இல் இடம்பெற்றது. இப்பரிசளிப்பு விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகொல்லாகம சாதனை புரிந்த மாணவியொருவருக்கு வெற்றிக் கிண்ணம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.







கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அண்மையில் 2017 க்கான இலக்கிய விழா கல்முனை உவெஸ்லி கல்லூரியில் இடம்பெற்றது. இதில் **"தென்றலின்"** முதுபெரும் எழுத்தாளர் கலாபூஷணம் மு.அருளம்பலம் (ஆரையூர் அருள்) எழுதிய **"இறையின்பப் பாவாரம்"** சிறந்த நூலகத் தெரிவு செய்யப்பட்டு, நூலாசிரியருக்குக் கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம் விருது வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். இவரைத் **"தென்றல் சஞ்சிகை"** மனதார வாழ்த்துகிறது.





கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்டம் 10/09/2017 அன்று இடம்பெற்றது. இதில் அடியவர்கள் பிள்ளையார், சிவபெருமானின் தேரினை வடம் பிடித்து இழுத்துச் செல்வதைப் படங்களில் காணலாம்.

– பழுவூரான் –

# நீத்தார் நினைவு

## சமூகப் பணியாற்றிய மகோன்னத

## ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா!!!



கல்முனையைச் சேர்ந்த கல்வியாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.ஐ.எம். முஸ்தபா ஊடகத்துறைக்கப்பால், ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, அட்டாளைச்சேனை கல்விக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர், சாரணர் இயக்க த்தின் மாவட்ட ஆணையாளர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருகை தரு விரிவுரையாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர்.

இவர் ஊடகப் பணிக்காக கலாபூஷணம் விருது, சாரணிய ஜனாதிபதி விருது, உதைபந்தாட்டத்துக்கான தேசிய விருது, சமூக சேவைக்கான டக்டரிய விருது, சாமஸ்ரீ தேச சக்தி விருது, வை.எம்.ஏ.விருது, சாரணிய சர்வதேச விருது, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரம் வழங்கிய விருது எனப் பல்வகை விருதுகளை தன் திறமையால் பெற்ற உன்னத – மகத்தான பன்முக ஆளுமை எனக் கூறினால் அது மிகையாகாது.

1970 களில் உதைபந்தாட்டப் போட்டிகளில் சாதனை படைத்தவர். அது மட்டுமன்றி குறுந்தூர ஓட்ட வீரராகமெய்வல்லுனர் போட்டிகளில் பிரகாசித்தார்.

இவ்வாறாக கல்வி, இணைப்பாட விதானம், ஊடகத்துறை எனப் பல்வேறு துறைகள் ஊடாகச் சமூகத்துக்காகப் பெரும் பணியாற்றிய அமரர். எம்.ஐ.எம்.முஸ்தபாவுக்குத் **"தென்றல்"** தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# விளையாட்டு வலம்

-கவிகரன்

## அக்கரைப்பற்று இ.கி.மியை வீழ்த்திக் கிண்ணத்தை சுவீகரித்தது சிவானந்தா!



கிழக்கின் சமர் என அழைக்கப்படும் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை அணிக்கும் - அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிஷன் தேசிய பாடசாலை அணிக்கும் இடையிலான "சிவராமா கிண்ணம் - 2017" உதைபந்தாட்டப் போட்டியில் சிவானந்தா அணி 3 -0 எனும் கோள்களின் அடிப்படையில் வெற்றியீட்டிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இப் போட்டி 06/08/2017 அன்று மட்டக்களப்பு சிவானந்தா தேசிய அதிபர் எஸ்.தயாபரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டிக்குப் பிரதம அதிதியாக இலங்கை உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் அனுரடி சில்வாவும், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் எம்.உதயகுமார் மற்றும் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களையும், பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.





திருமதி. கவிதா கிருபாகரன்

# அழகு குறிப்பு


## உங்களை இனிமையாக மாற்றும் பேஸ்மாஸ்க்!

**தேவையான பொருட்கள்**

- வாழைப்பழம் -01
- ஓரன்சு ஜூஸ் - 01 டேபிள் ஸ்பூன்
- யோகட் - 01 டேபிள் ஸ்பூன்

**செய்முறை**

- வாழைப்பழத்தை நன்றாக மசித்துக் கொள்ள வேண்டும்.
- அத்தோடு ஆரன்சு ஜூஸ், யோகட் போன்றவற்றை கலக்க வேண்டும்.
- இந்தக் கலவையை முகத்தில் தடவி, 15 நிமிடங்கள் அப்படியே வைத்திருக்க வேண்டும்.



## மருத்துவத் தென்றல்

# முதுகெலும்புக் குறைபாடு



மனித உடலமைப்பில் சீரிய இயக்கத்திற்கான முக்கியமானதொரு அவயமாக முதுகெலும்பு விளங்குகிறது.

சுறுசுறுப்பான இயக்கத்தையும், கம்பீரமான நடையையும் தருவதற்கு முதுகெலும்பு முக்கிய பங்காற்றுகிறது. முதுகெலும்பில் ஏற்படும் சிலகுறை பாடுகள் காரணமாகவும், அல்லது சத்தியின்மை காரணமாகவும் சிலருக்கு உடல் வளைந்து காணப்படும்.

சாதாரணமாக நல்ல ஊட்டச்சத்தான ஆகாரம் மற்றும் உடற்பயிற்சி இல்லாத நபர்களுக்கு முது கெலும்பு வளைந்து காணப்படுவது இயற்கையாகும். இவ்விதமான முதுகெலும்புக் குறைபாட்டினை மருத்துவ உலகில் வெர்ட்டிப்ரோ பேசினார் இன்சபிசியன்சி என அழைக்கிறார்கள். இந்தக் குறைபாட்டினை மருத்துவர்கள் வெர்ட்டிபெரல் பேசிலார் இன்சிமியாஎன்றும் சொல்வார்கள். முதுகெலும்பில் ஏற்படும் இந்தக் குறைபாடானது மருத்துவ ரீதியாக நிவர்த்திக்கக் கூடிய ஒரு தற்காலிகப் பிரச்சினையே ஆகும்.

மூளையின் பின்புறத்தில் நிகழக் கூடிய இரத்த ஓட்டமானது சரிவர நிகழாத நேரத்திலும் அல்லது குறைவான அளவில் இரத்த ஓட்டம் நிகழும் போதும் முதுகெலும்பில் வெர்ட்டிப்ரோ பேசினார் இன்சபியன்சி எனப்படுகின்ற இரத்த ஓட்டப் பிரச்சினை ஏற்படுகிறது.

மூளையின் பின்புறத்தில் நிகழ்கின்ற இரத்த ஓட்டமானது "மெடுல்லா" எனப்படுகின்ற மஞ்ஞை, சிறு மூளை, நடு மூளை, தாலமஸ் ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் கண்பார்வைக்குக் காரணமாக இருக்கின்ற ஆக்கிபிடல், கார்டெக்ஸ் ஆகியவற்றுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன.


எனவே எந்தப் பகுதிக்கு — எந்த அளவுக்கு இரத்தம் சரிவர எடுத்துச் செல்லப்படுவதில்லை என்பதே வெர்ட்டிப்ரோ இன்சபிசியன்சி பிரச்சினையின் தாக்கத்திற்கு அளவு கோலாகக் கண்டறியப்படுகிறது. உலகின் சில நாடுகளில் நோயாளர்களுக்கு ஏற்படுகின்ற பக்கவாத நோயானது 25 சதத்திற்கு மேம்பட்டு நிலையற்ற இரத்த ஓட்டக் குறைபாட்டினால் ஏற்படுகிறது.

இந்த உடல் பிரச்சினையானது மூளையின் முன்பக்க இரத்த ஓட்டக் குறைபாட்டினால் கரோட்டிட் ஆர்ட்டரீசை தாக்கிக் கொண்டு ஏற்படுகின்ற பக்கவாதத்திலிருந்து பாகுபடுத்திப் பார்க்க வேண்டியதொன்றாகும்.

## வெர்ட்டிப்ரோ பேசிலார் நோய்க்கான அறிகுறிகளும், அடையாளங்களும்

இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்படுகின்ற நோயாளர்களுக்கு ஓர் இடத்தில் அமைதியாக அமர்ந்திருந்த போதிலும், தலைசுற்றல், உடல் கிறுகிறுப்பு ஏற்படுவதே கண்டறியக் கூடிய முக்கியமான அடையாளமாகப் பெரும்பாலும் திகழ்கிறது. இது குறைந்த அளவில் நிகழும் இரத்த ஓட்டத்தின் அறிகுறியாகும். இந்த மிக முக்கிய அறிகுறியான தலைச் சுற்றலுடன் சில நோயாளர்களுக்கு "டிப்ளோப்பியா" எனப்படுகின்ற இரட்டைப் பார்வை, மங்கலான பார்வை ஆகியவையும் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன.

இச்சமயங்களில் உண்மையான காரணத்தை அறியாத நேரத்தில் இவ்வகை நோயாளர்கள் கண் மருத்துவரை அணுகி மருத்துவ ஆலோசனை பெறுவார்கள். வெர்ட்டிப்ரோ பேசினார் பிரச்சினை சற்றே அதிகமாகும் போது-தொண்டையின் முன்பகுதியில் நான்காய் பிரிக்கப்பட்டுள்ள கால் தசைகளை நீட்டுவதற்கு ஏதுவாகுகின்ற பகுதியானது நலிவடைகிறது. இந்தநிலை முழங்காலின் மூட்டுக்கள் நெளிவதைப் போன்ற உணர்வை நோயாளர்களுக்கு ஏற்படுத்தும். மேலும் இவ்வகையான நோயாளர்களுக்கு கால் மூட்டில் திடீரென்று இயலாமை உருவாகி, கீழே விழுகின்ற நிலையும் ஏற்படலாம். அவ்வாறு விழும்போது தலையில் அடியும், எலும்புகளின் முறிவும் ஏற்படு வதற்கு சந்தர்ப்பங்கள் உண்டாகும். பெரும்பாலும் வயதான நோயாளர்களுக்கே அதிகம் நிகழக் கூடியதாகும்.



கல்வித் தென்றல் -தயாரிப்பு:- செல்வராணி ரீச்சர்-

# போது அறிவும் - விடைகளும்

01.இலங்கைக்கேயுரிய விலங்கு.
 ❖ நீலப்புள்.

02. தெதுறு ஓயா கடலுடன் கலக்கும் மாகாணம்.
 ❖ வடமேல் மாகாணம்.

03. "குந்துகாலி" என அழைக்கப்படும் பறவை.
 ❖ புளுணி.

04. தூக்குக்குண்டு பயன்படுத்தும் தொழிலாளி.
 ❖ கொத்தன்.

05. தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்ட குளம்.
 ❖ கலாவாவி.

06. இயற்கையின் உழவன்.
 ❖ மண்புழு.

07. நீரில் பூக்கும் மலர்.
 ❖ ஆம்பல்.

08. எமது நாட்டுக்கே உரித்தான மீனினம்.
 ❖ புள்ளிக்கோட்டி.

09. உலக முதியோர் தினம்.
 ❖ ஒக்டோபர் - 01.

10. எமது நாட்டில் பணத்தாள்களை வெளியிடுவது.
    ❖ இலங்கை மத்திய வங்கி.

11. ஒலிம்பிக் கொடியின் பின்னணி நிறம்.
    ❖ வெள்ளை.

12. சாதாரண தபாற் பெட்டியின் நிறம்.
    ❖ சிவப்பு.

13. ஜோன் லோகி பெயார்ட் கண்டு பிடித்தது.
    ❖ தொலைக்காட்சி.

14. புரதக் குறைபாட்டால் ஏற்படும் நோய்.
    ❖ குவாசிக்கோர்.

15. இலங்கையின் தேசியப் பறவை.
    ❖ காட்டுக்கோழி

16. உலக சர்வதேச எழுத்தறிவு தினம்.
    ❖ செப்டெம்பர்-08

17. முள்முருக்கு பூக்கும் காலம்.
    ❖ சித்திரை.

18. மனதை ஒருமுகப்படுத்த உதவுவது.
    ❖ தியானம்.

19. இலங்கையின் தேசிய மலர்.
    ❖ அல்லி.

20. எமது நாட்டிலுள்ள உயர்ந்த மலை.
    ❖ பீதுறுதாலகாலமலை.


21. மனைவியை இழந்து வாழ்பவன்.
    ❖ தபுதாரன்.

22. வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன்.
    ❖ பிரதிவாதி.


ஆரையம்பதியில்....
அழகிய 22 கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம்
செய்ய
வேண்டிய ஒரே
இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி
அபிராமி ஜீவல்ஸ்
பிரதான வீதி
ஆரையம்பதி - 02
தொ.பே : 065 - 3644944
077 - 6506329
AD/0008


அழகிய 22கரட் தங்கநகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள நாட
வேண்டிய தங்கநகைகளின் சொர்க்காபுரி
சொர்ணம்
நகை
மாளிகை
AD/0040
16, புனிதஅந்தோனியார் வீதி, மட்டக்களப்பு.
T.P: 065 2222152
212, 214 பிரதானவீதி, கல்முனை.
T.P: 0672229121/2229860
59, மட்டக்களப்புவீதி, கல்முனை.
T.P: 067 2220191


Ladshana Stamp
-Computer Rubber Stamp Maker-
Rubber Stamp
Plastic ID Card
Mug, Tile Print
Photo Frame
Certificate/Invitation
Name Board
# 39A, Baily Road, Arasady, Batticaloa.
Tel: 065 222 4048, 077 69 155 74.
e-mail: ladshana@gmail.com
AD/0024


Headway
School of Languages
Why study at Headway?
Speaking, Listening, Reading, and Writing என நான்கும் ஒருங்கே அமைந்த பாடப்பரப்பு
பாடசாலை முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கற்பித்தல் முறை
சர்வதேச தரத்திலான Cambridge English பரீட்சைகளுக்கு மட்டக்களப்பிலேயே தோற்றக்கூடிய வாய்ப்பு
நடைமுறையில் பயன்படக்கூடிய வகையிலான ஆங்கிலமொழிப் பாடப்பரப்பு
சக மாணவர்களுடன் உரையாடல் மூலமான பேச்சுப் பயிற்சி
தேர்ச்சி பெற்ற ஆசிரியர் குழாம்
Headway School of Languages
New Ancheneye Complex, Arasady, Batticaloa
T: 065 492 4042 | 065 222 5612 | 070 334 4445
வணசிங்கா பிரிண்டர்ஸ் 496A, திருமலை வீதி, மட்டக்களப்பு.